இதழ்-51

01.09.2022

# தூமி

பல்சுவை மின்னிதழ்



## பெருவெள்ளத்திற்கான பயணம்

# படைத்தல் மட்டுமல்ல வரலாறு

ஆசிரியர் பதிவு

ஒரு வீட்டில் தொடங்கி ஒரு நாடு வரை அதன் ஆரம்பம் தொடங்கி இன்றுவரை அதற்கென்று ஒரு வரலாறு இருக்கும். அது சுவாரசியமாக இருக்கிறது, இல்லை என்பதை தாண்டி அதோடு சம்பந்தப்பட்ட சம்பவங்கள், அதில் ஈடுபட்ட நபர்கள் என அவற்றுக்கென்று ஒரு வரலாறு இருக்கும்.

இந்த வரலாறுகளை ஆவணப்படுத்த இன்று பலரும் பல்வேறு வழிகளில் முயன்றுகொண்டு இருக்கிறார்கள். வரலாற்றை ஆவணப்படுத்துபவதாக கூறுபவர்கள் தமக்கு கிடைத்த தகவல்களின் உண்மைத் தன்மைகளை சிறதும் ஆராயாமல் ஆவணப்படுத்துவதையும் காணக்கூடியதாக உள்ளது. இதில் வரலாற்றை ஆவணப்படுத்துவதிலும் முக்கியமானது உண்மை வரலாற்றை மட்டும் ஆவணப்படுத்துவது.

அண்மையில் திருக்கேதீச்சர ஆவணப்பெட்டகம் என்கின்ற வரலாற்று ஆவணம் கலாநிதி. ஆறு. திருமுருகன் அவர்களால் தொகுக்கப்பட்டு ஆரம்பத்தில் கேதீச்சரத்திலும் பின்னர் நல்லூரிலும் வெளியிடப்பட்டிருந்தது. அதில் அவர் பத்தொன்பது இருபதாம் நூற்றாண்டு வரலாறுகளை அதிகமாக ஆவணப்படுத்தியிருந்ததோடு அவற்றின் முக்கியத்துவத்தையும் வெளியீட்டுரையில் பேசியிருந்தார்.

பொதுவாக மன்னர் கால வரலாறுகளே வரலாறுகள் என்று ஆவணப்படுத்தப்படுகையில் சமகால வரலாறுகள் ஆவணப்படுத்தப்படுவதில்லை. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சம்பந்தர் பதிகம் பாடியது பாடப்புத்தகத்தில் உள்ளது. ஆனால் கவனிப்பாரற்றுக்கிடந்த கேதீச்சரத்தை அடையாளம் காட்டி மீட்டெடுத்த நாவலர் சார்ந்த கதை இன்றைய தலைமுறைக்கு தெரியாமலே போய்விடுமென்று வெளியீட்டுரையில் ஆறு.திருமுருகன் அவர்கள் குறிப்பிட்டுக் கூறியிருந்தார்.

இந்த நிலைதான் இன்றைய சகல வரலாற்று இடங்களுக்கும் உள்ளது. இடைநிலை வரலாறுகள் மற்றும் நவீன வரலாறுகள் மிகமுக்கியமானவகையாக உள்ளபோதும் அவை கவனிப்பாரற்று காணாமல் போய்விடும் அபாயம் உள்ளது. கேதீச்சரம் முழுமையாக ஆவணப்படுத்தப்பட்டது போல ஏனைய மத தலங்களும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மற்றய இடங்களும் ஆவணப்படுத்தப்பட வேண்டும். இறந்தகால பெருமைகளை மட்டும் பேசிக்கொண்டிருப்பது பெருந்தவறுதான். ஆனால் வரலாற்றையே பேசாமல் விட்டால் அது மிகப்பெரும் தவறாகிப்போய் விடும்.

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

துமி பல்சுவை மின்னிதழ்

**ஆசிரியர்**
ச. சந்தோஷன்

**இணை ஆசிரியர்கள்**
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

**திறனாய்வாளர்கள்**
கு. கீர்த்தனன்

**வடிவமைப்பாளர்**
வ. குணநீதன்

**செய்தியியலாளர்**
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்துளை...

04 வரலாறு என்ன சொல்கின்றதென்றால்?
11 முந்தைய என்னவள்
12 நீங்கள் நல்லவரா? கெட்டவரா? Mr.செலன்ஸ்கி
16 ஒரு சின்னஞ்சிறுகதை
17 2022இல் ஆன்மீகம்
23 குறுக்கெழுத்துப்போட்டி
24 ஈழச்சூழலியல்
28 சித்திராங்கதா
38 சிக்கலில் பிக்பாஸ் தொடர்



# வரலாறு என்ன சொல்கிறதென்றால்....

"எரிபொருளுக்கு காத்திருக்கும் மக்களுக்கு அதிர்ச்சி! அடுத்த எரிபொருள் கப்பலுக்கு செலுத்த டொலர் இல்லை"

"இலங்கையில் டொலர் இல்லை என்பதால், சீனியை வழங்க மறுக்கும் இந்திய விநியோகஸ்தர்கள்"

"டொலர் இல்லை! நீண்ட வரிசை! தட்டுப்பாடு! கப்பல் வருதாம்! பௌசர் வருதாம்!"

அண்மைக்காலமாக அதிகமாய்க் கேட்டும் அடுத்தவர்களிற்கு சொல்லியும் பழகிப்போன - சலித்துப்போன கூற்றுக்களே இவை.

இது நமது தலைமுறை மட்டும் கண்ட ஒரு புதிய பிரச்சனை அல்ல. முன்னரும் இதைப்போல் பலமுறை கடந்து வந்திருக்கிறது இந்த நாடு.

1970ற்கு பின்பு அரிசி, மா, சீனி, பாண், பால்மா, பருப்புக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு மற்றும் வரிசைகளை பற்றி இங்கு மீண்டும் ஒருமுறை நினைவு கூறுவோம். அது கொடுமையான காலம் என தமிழ் நடுத்தரவர்க்க நுகர்வாளர் கூட்டம் அன்று அழுது கொட்டியது. மிளகாய், வெங்காயம், உருளைக்கிழக்கு, பருப்பு போன்றவைகளின் இறக்குமதிக்கு வருடாவருடம் 8 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது என்ற குற்றச்சாட்டில் உப உணவுப் பொருட்களின் இறக்குமதிக்கு முற்றாக தடை விதித்தது அரசு.

இதுவே தமிழ் விவசாயிகளிற்கு ஆதாயமாக மாறியது. இறக்குமதி தடை விதிக்கப்பட்டவை சிங்கள விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படாத பொருட்களாகும். ஆதலால் அன்று யாழ்ப்பாணம், வன்னிப்பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட செத்தல் மிளகாயை சிங்கள மக்கள் 40 ரூபாய்க்கு வாங்கினார்கள். வெங்காயம் 25 ரூபாய் வரை விலைபோனது.



வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்ட காலத்தில் 1.50 சதத்திற்கு விற்கப்பட்டது. இறக்குமதித் தடையின் பின் 25 ரூபா வரை ஏறியபோது தமிழரின் உற்பத்தி பெருகத் தொடங்கியது. மூன்று வருடங்களின் பின்தான் விலை குறையத் தொடங்கியது. பழைய விலைக்கு ஏறக்குறையச் சமமான விலை இறங்கியது.

ஆனால் பாண், அரிசி, மா, பால்மா, பருப்பு, சீனி ஆகியனவற்றிற்கு தொடர் தட்டுப்பாடு ஏற்பட்டது. நீண்ட வரிசைகள் தொடர்ந்தன. இது தனியே இறக்கமதித் தடையால் நிகழ்ந்துவிடவில்லை. இதற்கு பெருமளவு கறுப்புச்சந்தையும் காரணமாகும். ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தில் ஈடுபட்ட தனியார் வர்த்தகர்கள் இறக்குமதித்தடையால் பாதிப்புற்றனர். இவர்கள் அரசுக்கு தமது வன்மமான எதிர்ப்பைக் காட்டினார்கள். பொருட்களைப் பதுக்கி வைத்து செயற்கையான தட்டுப்பாட்டை அவர்களே ஏற்படுத்தினார்கள்.

1972-1973 களில் அரசி விலை கொத்துக்கு 8-10 ரூபாய்கள் வரை ஏறியது. என்றபோதும் 1974 களில் அது 4.75 வரையாகி பின்பு 1.20க்கு வந்துவிட்டது. உபஉணவு தாராளமாக உற்பத்தியாகி சந்தைக்கு வரத்தொடங்கியபோது விலைகள் இறங்கத்தொடங்கின. சுயசார்புப் பொருளாதாரம் வளர்ந்தது. இறக்குமதியால் சீவித்த நாடு தன்னிறைவை நோக்கி நகர்ந்தது. ப.நோ.கூ. சங்கங்களை அரசு ஊக்கி வளர்த்தது. அவை முதலாளித்துவத்தின் ஊழல்கள், முறைகேடுகளுடனும் வளரத்தொடங்கியது. முதலாளித்துவ சந்தை முன்பும், வர்த்தகர்கள் முன்பும் அவை திணறியபோதும் அவை முன்னேறிக் கொண்டே இருந்தன.

1973களில் பெருமளவு விவசாயத் தொழிலாளர்கள் உருவாகினர். நெல்வயல், மிளகாய், வெங்காயம், புகையிலைத் தோட்டங்களிலேயே உழைக்கும் விவசாயக் கூலித்தொழிலாளர்கள் பெருமளவு உருவாக்கப்பட்டனர். மலையகத்திலிருந்தும் வன்னிப் பகுதிக்கு வேலை தேடி மக்கள் வந்தனர்.

வீழ்ந்து போன அன்றைய பொருளாதாரம் தற்சார்பு முறையால் மெல்லத் தலைநிமிரத் தொடங்கியது.

ஒரு பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதில் இன்னும் முக்கிய பங்காற்றுவது எது என்று நினைக்கிறீர்கள்?

குடிகாரன் தள்ளாடினால்தான் பொருளாதாரம் தள்ளாடாது. மாறாக குடிகாரன் நிதானமாக இருந்தால் பொருளாதாரம் தள்ளாடும் என்பது உலக நாடுகளிற்கும் பொது விதியாகிவிட்டது.

அன்று மூத்த கிழவன் போதையில் சொன்ன புத்தி ஒன்று ஞாபகம் வருகிறது .

“கள்ளுக் குடித்தால் காசு எங்களிட்ட இருக்கும். சாராயம் குடித்தால் காசு வெளியில போயிடும்.”

உண்மையும்தான்.

கள்ளுக்குக் கொடுக்கும் பணம் உள்ளுர் பொருளாதாரத்தை உயர்த்தும். சாராயத்துக்குக் கொடுக்கும் காசு பணத்தை வேறு ஒருவரது கைகளைச் சென்றடைய வைக்கும்.

அன்றைய கள்ளுச்சீவும் தொழிலாளர்களிற்கும் தற்சார்பு பொருளாதாரத்தை மீட்டெடுத்த பெருமையில் பங்குண்டு என்பதை யாராலும் மறுக்க இயலாது.

ஒரு திறமான சீவல் தொழிலாளி சாதாரணமாக 35-40 பனை மரங்களில் கள்ளு சீவுவான். உயிரை மதியாமல் 40-50 பனைகளில்கூட ஏறி சீவும் கடின உழைப்புத் தொழிலாளர்கள் அன்று இருந்தனர். பனை மரங்கள் சில 80 அடி உயரம் வரையில் இருக்கும். உயர ஏறும் போதும் வட்டுக்களைப் பிடிக்கும்போது விழுந்தும் வழுக்கியும் பெருமளவு தொழிலாளர்கள் இறந்திருக்கிறார்கள். சிலர் உயிர்தப்பி கால், கை முறிந்தது, முதுகெலும்பு உடைந்து உழைப்பில் ஈடுபட முடியாதென குடும்பங்கட்கு பாரமான மனிதர்களாக மாறினார்கள். இந்தத் தொழிலில் காப்புறுதி கிடையாது. சனங்கள் தம்மிடையே சண்டையிடும்போதும், திட்டும்போதும் “பனையாலே விழுவான்” , “துலாவாலை பொறிவான்” என்று சாபமிடுவது அக்கால இத்தகைய விபத்துகளின் கொடுமையைக் காண உதவும்.

கள்ளுச்சீவும் தொழிலாளர்கள் சீவிய கள்ளை விற்பனை செய்ய கள்ளுத்தவறணை முறை அன்று அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டது. அதனால் கள்ளு விற்பனை மேலும் பெருகியது.

கள்ளுத்தவறணை முறை வருமுன்பு சீவிய கள்ளை மாலை நேரங்களில் தம் வீடுகளில் வைத்தே விற்பனை செய்ய வேண்டிய சூழல் இருந்தது. இரவு நேரங்களில் சிறு குப்பி விளக்குகள், தகர விளக்குகள் தரும் வெளிச்சத்தில் இவை விற்பனை செய்யப்பட்டன. இப்படி சீவல் தொழிலாளியின் குடிசைகளிற்கு சென்று குடிக்கும் குடிகாரர்கள் குடித்துவிட்டு உடன் போகமாட்டர்கள். மணித்தியாலக் கணக்கில் குந்தியிருப்பர்கள்.

சீவல் தொழிலாளியின் குடிசை சிறிதாக இருக்கும். குடும்பம் சமையல் படுக்கை அதனுள்தான் நடக்கும். அனேகமாக ஒரே ஒரு குப்பி விளக்கு இருக்கும். இரவு நேரங்களில் சீவல் தொழிலாளியின் பிள்ளைகள் பள்ளி போவதாக இருந்தால், படிக்க முடியாது. அனேகமாக இருக்கும் ஒரே ஒரு குப்பி விளக்கு கள்ளுக்குடிப்பவர்களின் சுருட்டு பீடி பற்ற வைக்க அடிக்கடி வெளியே எடுத்து வரப்படும். எனவே பிள்ளைகள் படிக்க முடியாது. கல்வியறிவு பெற்றிராத தாய், தந்தைக்குப் பிறந்த அக்குழந்தைகளின் கல்வி

சாதகமற்ற சூழலால் இன்னமும் பாதிப்படையும்.

கள்ளுக் குடிப்பவர்கள் சத்தம் போடுவார்கள். தூசணம் பேசுவார்கள். கதை வழிப்படுவார்கள். சில சமயம் அடிபிடிப்படுவார்கள். கள்ளுச்சரியில்லை. பழங்பள்ளு, புளிச்சகள்ளு என்று சீவல் தொழிலாளியை அடிப்பார்கள். 4-5 சீவல் தொழிலாளர்களை வைத்து கள்ளுச் சீவி வித்து தம் சொந்த சாதிக்தொழிலாளிகளைக் கூடச்சுரண்டும் முறையும் பரவலாக இருந்தது. அத்துடன் உயிராபத்தான கள்ளுச் சீவும் தொழிலைவிட்டு ஏராளமான குடும்பங்கள் விலகியும் உள்ளன. உயிராபத்து மட்டுமல்ல கள்ளுச் சீவுதல் சமூக அந்தஸ்து குறைந்த தொழிலென பார்க்கப்படுவதால் கைவிட்டோரும் அதிகம்.

இத்தகைய பிரச்சனைகள் யாவும் தவறணைமுறை வந்தபின்னரே நின்றது. தவறணைகளில் கள்ளு விற்பனை செய்யப்பட்ட போது அவர்களது வாழ்க்கைத்தரம் பலமடங்கு உயர்ந்தது.

கள்ளுடன் பதநீர் வடிப்பதும் வளர்ந்தது. சீனிக்கு இறக்குமதித் தடை இருந்தமையால் சீனிக்குப் பதில் பனங்கட்டி, பனம் சீனி, பனம் கற்கண்டு, பனம் பாணி என்பனவற்றின் உற்பத்தியும், தேவையும் அதிகரித்தது. ஒடுக்கப்பட்ட மக்கள் குடும்பங்களாக இத்தொழிலில் ஈடுபட்டனர். விதவிதமான வடிவங்கள், நிறைகளில் பனங்கட்டிக் குட்டான்களில் வார்க்கப்பட்ட பனங்கட்டிகள் சந்தைக்கு வந்தன. பதநீர் போத்தல் கள்ளு, பனங்சீனி என்பன ப.நோ.கூ சங்கங்களாலும், உற்பத்தி செய்யப்பட்டு பாவனையாளர்களிடம் சென்றது.

சீவல் தொழிலாளிகளை “ஏறுதழையென்ன பட்டி நாரென்ன” என்று மேல்சாதி வெறியர்கள் இழிதொழிலாய் எண்ணிப் பழித்தபோதும், அதுவும் ஏனைய தொழில்கள்போல் தொழிலாளர்களின் உழைப்புச்சிறப்புக்குரிய தொழிலாகும் என்று வளர்ந்து வந்தனர்.

கள்ளுசீவல் என்பது உண்மையில் ஒரு கலையாகும். பனைகளில் ஆண்பனை, பெண்பனை என்ற வித்தியாசமான சீவல் முறைகள் உண்டு. நுணுக்கமான அனுபவம் நிறைந்த சீவல் முறை அதற்குச் தெரியவேண்டும். கேக் போடுவதுபோல் பதம் தெரியவேண்டும். சீவல் தொழிலாளியின் அறிவு அனுபவம் என்பன எந்த சமூக மதிப்பையும் பெறுவதில்லை என்பதைக் கவனிக்க வேண்டும்.

ஆண்பனை நீளமானது, ஆண்பனை மற்றை பனைகட்கு முன்பே தை, மாசி மாதங்களிலேயே வந்துவிடும். மற்றைய பனைகள் சாதாரணமாக பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களில் அருகத் தொங்கவிடும். பனங்கள்ளு இல்லாத காலங்களில் ஆண் பனையின் பாளைகளில் இருந்து மூன்றுவித தொழல்நுட்பத்தைப் பாவித்து

கள் எடுப்பார்கள். ஆண்பனையின் பாளையின் வட்டை வெட்டி அடியில் பாளை சீவுதல், சிக்காயை வெட்டி பனம் பழமாக விடாமல் செய்து கள்ளு எடுத்தல், பங்குனி மாதத்தில் பாளையை வெட்டி ஒக்டோபர் மாதத்தில் திரும்ப வரப்பண்ணுதல் இதையே “வம்புப் பாளை” என்று அழைப்பார்கள்.

பாளையைத்தட்டி காயப்படாமலும் பாளை வெம்பல் குரும்பெட்டி வராமலும் செய்ய அந்தத் தொழில்முறை தெரியவேண்டும். எல்லாக்கள்ளுச் சீவும் தொழிலாளிகளினாலும் இதைச் செய்யமுடியாது. அதற்குரிய அனுபவம் கொண்ட தொழிலாளியைக் கொண்டு சீவிய பின்பே மற்றைய தொழிலாளிகள் கள் எடுப்பார்கள். பனைகளில் ஆண்பனை, பெண் பனை. மலட்டுப்பனை என்ற பகுப்புகள் உண்டு. ஆண்பனைக்கே விசேடமாக வழு இழுப்பார்கள். அதன் மூலம் கள்ளுப் பெறப்படும். ஆண்பனையில் காலையில் சீவும் புதுக்கள்ளு விரும்பிக் குடிப்பதற்கு மட்டமல்ல அம்மை, பொக்கிளிப்பான், சின்னமுத்துவுக்கும் மருந்தாகப் பயன்படுத்தப்பட்டது. 1970களின் இடதுசாரிக் கூட்டரசு காலத்தில் பனம் பொருள் அபிவிருத்திச் சபை நிறுவப்பட்டு பனை ஓலைப் பொருட்களோடு ஏனைய பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டதுடன், பனம் பினாட்டு, பனங்கட்டி உற்பத்தியுடன் பனம் பழத்தில் இருந்து சொக்கலேட் உற்பத்தி திட்டமும் பரிசோதிக்கப்பட்டது.

அக் காலத்தில் கள்ளுத்தவறணை வளாகத்தில் ரேஸ்ட் கடையென ஒரு பெட்டிக்கடையும் இருக்கும். அங்கு ஆடு அல்லது மாட்டின் இரத்தவறை, மீன் பொரியல், இறால்பொரியல், தட்டைவடை, மரவள்ளிக் கிழங்கு அவியல், பொரியல், கடலை, பிலாக் கொட்டைப் பொரியல் போன்றவை விற்கப்படும். கள்ளுக் குடிப்பவர்கள் அவற்றை விரும்பி வாங்கி உண்பார்கள். இந்த ரேஸ்ற் கடை வியாபாரத்தை நம்பி ஒவ்வொரு ஊர்களிலும் நாலைந்து குடும்பங்கள் இருந்தார்கள். அவர்கள் சிறப்பான வருமானத்தைப் பெற்றுச் சிறந்த வாழ்க்கைத் தரத்தை அனுபவித்தார்கள

இந்த ரேஸ்ற் கடைகளில் விற்கப்பட்ட சிற்றுண்டிகள் இயற்கையில் கிடைத்த உணவுப் பொருள்களாகவும் போசாக்காகவும் இருந்தன.

1990களின் முற்பகுதியில் வடபிரதேசத்தில் தென்பகுதியிலிருந்து மதுபானம் எடுத்துவருவது முற்றாகவே தடை செய்யப்பட்டிருந்தது. அந்தக்



காலப்பகுதியில் கள் இறக்கும் சீவல் தொழிலாளர்கள் உயர் வருமானம் பெற்று நல்லதொரு வாழ்க்கைத் தரத்தில் இருந்தார்கள்.

அக் காலத்திலே விகார் எனும் பெயரில் பனஞ்சாராயமும் உற்பத்தி செய்யப் பட்டது. இயற்கையான சாராயம் என்றால் அது பனஞ் சாராயம்தான். வடமராட்சி திக்கத்தில் வடிக்கும் பனஞ் சாராயத்திற்குச் சிங்கள மக்கள் கொடுக்கும் முக்கியத்துவம் இங்கு குறிப்பிடத்தக்கது.

குடி என்றால் எல்லாம் குடிதானே? மதுவே உடல் நலத்தற்கு கேடு என்கிற போது கள்ளில் அப்படி என்ன பெருமை என்று கேட்கிறீர்களா?

வெற்றிகரமாக மதுவை ஒழித்த ஒரு நாட்டை அல்லது ஒரு மாநிலத்தையாவது உங்களால் காட்ட முடியுமா??

மதுவை உலகிலிருந்து அறவே ஒழிக்க முடியாது. அதற்குரிய சாத்தியக்கூறுகளும் இல்லை.

மது அருந்துவோரில் 20 சதவீதமானோரே அதற்கு அடிமையாகின்றனர் என்கிறது புள்ளிவிபரவியல். உலகத்திலேயே மற்ற வியாதிகளை விட நீரிழிவு நோயால் தான் அதிகமானோர் இறக்கின்றனர். அதற்காக இருக்கின்ற அனைத்து சீனி ஆலைகளையும் மூடி விட முடியுமா? அது நியாயமாகுமா?

இன்பங்களை தேடி அனுபவிப்பது மனிதனின் பிறவி இயல்பு. மது குடிப்பது என்பது மனிதனின் உயிரியல் கூறோடு சம்பந்தப்பட்ட ஒன்று. இதற்கு ஒரு வரலாற்று மரபும், தொடர்ச்சியும் உண்டு. நாம் அதிகபட்சம் இந்த பழக்கத்தை கட்டுக்குள் வைத்துக் கொள்வது பற்றி சொல்லிக் கொடுக்கலாம். அவ்வளவு தான். அதுக்கு மேல் ஒன்றும் செய்ய முடியாது. மதுவை தடை செய்தால் பல கள்ளச்சந்தைகள் தான் முளைக்கும். ஆதலாலே கள்ளு உற்பத்தியை பெருக்குவதன் மூலம் எம்மவர்களின் பொருளாதாரத்தை அதிகளவு மேம்படுத்தலாம் என்பது எமது சாரம்.

புலம்பெயர் தேசங்களிலிருந்து வகை வகையான சாராயப் போத்தல்கள் வருடா வருடம் ஆடி, ஆவணி மாதங்களில் தாயகத்திற்கு வரும்.

“நாங்கள் என்ன லோக்கல் கள்ளுச்சாராயமோ குடிக்கிறது. பொறின் சரக்கெல்லோ குடிக்கிறம்”



என்கிற பீத்தல் பெருமையும் கள் உற்பத்திக்கு வில்லத்தனமாக நிற்கிறது. எல்லாவற்றையும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துகொள்ள வேண்டுமென்ற அரசாங்கங்களின் கொள்கைகள் காரணமாக உள்நாட்டவரின் திறமை மதிக்கப்படாமல் போவது - இது வரலாற்றின் துயரமாகவே முடியும் என்பது நாம் கற்றுக்கொண்ட பாடமாகும்.

திட்டமிட்ட அரச சதிகள் பனைமரங்களில் கள்ளுச் சீவுவதை தடைசெய்து தமிழரின் பொருளாதர பலத்தை தலைநிமிர விடாமல் செய்ய எத்தணிக்கலாம்.



ஆனால் தமிழர் தாயகத்தின் தனிப்பெரும் அடையாளமாக பன்நெடுங்காலமாக நீடித்து நிலைபெற்றிருக்கும் பனை மரமானது, தமிழர்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு என்பவற்றில் ஆழமாக இழையோடி தமிழர்களின் வாழ்வியலோடு இரண்டறக்கலந்த ஒன்றாகும்.

உலகில் எத்தனையோ நாடுகளில் பனை மரம் இருந்தாலும் ஒரு இனத்தின் அடையாளமாக பனை மரம் அடையாளப் படுத்தப்படுகின்றதென்றால் அது தமிழினத்தின் சார்பாக மட்டுமே.

யுத்தம் நடந்தேறிய காலகட்டத்தில் பல இலட்சம் பனை, தென்னை மரங்கள் அழித்தொழிக்கப்பட்ட நிலையில் தமிழர்களின் தொன்மத்தின் அடையாளமாக தமிழர் தாயகத்தின் நிலப்பரப்பெங்கும் நிமிர்ந்தோங்கி வளர்ந்து முரசறைந்து நிற்கும் பனை வளங்களில் இருந்து பெறும் உற்பத்திகளை பாதுகாப்பதன் மூலமே எமது இருப்பினையும் பொருன்மிய பலத்தினையும் தக்கவைக்க முடியும்.

கற்பக தருவை கையில் வைத்துக்கொண்டு கடன் கேட்டு அலையும் மூடர் வாழ்விலிருந்து விடுதலை அடைவோம். எம்மை நாமே சார்ந்து வளரும் பொருளாதாரத்தால் மீண்டும் தலைநிமிர்வோம்.

# முந்தைய என்னவள்



நீடிய நாட்கள் பின் ~ முன்
தேடிய அவள் படம் கண்டேன்
கூடிய பொழுதுகள் கண்முண்
ஆடியே சென்றன.
ஆயினும்
அவள் கொண்ட மாற்றங்கள்
அதிகம்.
உள்ளம் மாறிவிட்டாள்
உருவம் மாறிவிட்டாள்,
உடைகளும் மாற்றிவிட்டாள்.
பல தடைகள் தாண்டி
அவளாய் போன
அவளைக் கண்டேன்.

ஆம்!
எத்தனை மாற்றங்கள் ஆயினும்
ஏனோ கண்கள் மட்டும்
அப்படியே???
அவை தானே எனை கைது செய்தவை,
அவை தானே பல கதைகள் சொன்னவை,
அவை தானே சண்டை செய்தவை
அவை தானே கோபம் கொண்டவை,
அவை தானே எனக்காய் கண்ணீர் கரைத்தவை.

அவற்றை மட்டும் என்றும்
அழகுற ரசிக்கும்
சிறுமனமும்
நானும் !!

சி. குருபரன்

சி.குகதாசன்



# நீங்க நல்லவரா? கெட்டவரா? Mr: செலன்ஸ்கி

உலகில் தவிர்க்க முடியாத ஓர் ஆளுமையாக அனைவராலும் நோக்கப்படும் ஜனாதிபதி செலன்ஸ்கி (Volodymyr zelenskyy ) ஆவார். போராடி தோல்வியடைந்தாலும் தோல்வி அடைவோமே தவிர ஒருபோதும் ரஸ்யாவிடம் சரணடைய மாட்டோம் என்று வல்லரசு நாடுகளுடன் எதிர்ச்சமர் புரிந்து வருபவர் தான் இந்த உக்ரேனுடைய ஜனாதிபதி. நவீன உலகில் தவிர்க்க முடியாத ஆளுமையாக தலைவர்கள் அனைவரின் கவனத்தை ஈர்த்த ஒரு தலைவராகவும் ரஸ்யாவிற்கு சிம்ம சொப்பனமாக விளங்குகின்ற தலைவராக செலன்ஸ்கி ஜனாதிபதி விளங்குகின்றார்.

இவர் உக்ரைனின் ஆறாவது ஜனாதிபதியாவதுடன் 2019 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை உக்ரைனின் ஜனாதிபதியாக கடமையாற்றி வருகின்றார். இவர் 1978ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதி உக்ரைனில் உள்ள Kryvyi rih ( Ukranian SSR Soviet Union ) என்ற இடத்தில் பிறந்து இருக்கிறார். இவருடைய தந்தையின் பெயர் Oleksandr Zelenskyy இவர் ஒரு பேராசிரியராக மற்றும் கணினி விஞ்ஞான துறையின் தலைவராகவும் பணியாற்றியிருக்கின்றார். ( Kryvyi Rih State University of Economics and Technology). இவருடைய தாயார் Rymma Zelenska இவர் ஒரு பொறியியலாளராகும். இவர் Kyiv National Economic Universityy; LLB பட்டம் முடித்துள்ளார். இவர் 1.7 மீட்டர் உயரம் உள்ளதுடன் உக்ரைன் தேசியத்தினை அடையாளமாகவும் கொண்டு விளங்குகின்றார். 2003ஆம் ஆண்டு





Olena Zelenska என்பவரை திருமணம் செய்து கொண்டார். அத்துடன் இவருக்கு இரண்டு குழந்தைகள் காணப்படுகின்றார்கள.மகள் Oleksandra மகன் Kyrylo. .இவர் ஆரம்பத்தில் ஒரு தொலைக்காட்சி நகைச்சுவை நடிகராகவும் பணியாற்றியிருந்தார். தற்சமயம் இவர் சுதந்திர கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி ஜனாதிபதியாக பணியாற்றுகின்றார். அத்துடன் தற்சமயம் Mariinskyi palacey வசித்து வருகிறார்.

இவர் பிறந்த பொழுது நோக்கினால் அது ரஸ்யாவுடன் ஒன்றித்து உக்ரைன் காணப்பட்டு இருந்தமையால் இவருடைய தாய்மொழியாக ரஸ்யன் மொழியே விளங்கியிருந்தது. 1990ஆம் ஆண்டுகளில் ரஸ்யாவில் இருந்து பிரிந்தது. அதிலிருந்து இவர் உக்ரைனில் வாழத் தலைப்பட்டார் இவர் தன்னுடைய நடிப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்த ஒருவராக விளங்குகின்றார். ஒரு சமயம் தொலைக்காட்சியில் நடக்கும் நாடகத்தின் பொழுது உக்ரைன் ஜனாதிபதியாக வேடமேற்று நடித்திருந்தார். அதேபோன்று பிற்பட்ட காலம் உத்ரைன் ஜனாதிபதியாக வந்துள்ளார். உக்ரைனில் பல்வேறு பணிகளை ஆற்றிய ஒரு நபராக காணப்படுகின்றார். டுநுயுபுருநு ழுகு டுயுருபுர்வுநுசு என்ற தொண்டு அரச சார்பற்ற நிறுவனத்தினையும் ஸ்தாபித்து இருக்கின்றார். 30க்கு மேற்பட்ட தேசிய தொலைக்காட்சி விருதுகளையும் இவர் பெற்றிருக்கின்றார் அதில் ஒன்றாக உக்ரைன் தொலைக்காட்சி உயர் விருதான வுநுடநவசைஅா விருதினையும் இவர் பெற்றிருக்கின்றார்.

உக்ரைனானது தன்னுடைய ஒரு பிராந்தியம் எனக்கூறி ரஸ்யா உக்ரைன் மீது படையெடுப்பு மேற்கொண்டது. அந்தப் படையெடுப்பு தொடர்பாக பல்வேறு உலக நாடுகளின் போரியல் நிபுணர்கள் கருத்து கூறுகின்ற போது போர் தொடுத்து குறுகிய நாட்களில் நடைபெற்று முடிந்துவிடும் என்றும் ரஸ்யாவானது மிக இலகுவாக வெற்றி அடைந்து விடும் என்றும் குறிப்பிட்டிருந்தனர். ஏனெனில் ரஸ்யாவுடன் நோக்கும் போது உக்ரைனானது ஒரு மிகச் சிறிய நாடாக காணப்படுவதுடன் தனது





அதிதிறமையுடனும் மற்றும் அதி நவீன ஆயுதங்களுடன் அணுவாயுத பலத்துடனும் காணப்படுகின்ற ஒரு நாடாக ரஸ்யா விளங்கி இருந்தமையால் போரில் வெற்றியடைந்து விடும் என்றனர்.

இருப்பினும் இன்று வரைக்கும் ரஸ்யாவுடன் எதிர் நிலை நின்று போர் புரிவதற்கு பிரதான காரணியாக அமைந்தது இந்த உக்ரேனிய ஜனாதிபதி அவருடைய துணிவும் நம்பிக்கையும் ஆகும். தேசியத்தைப் பேணிய மக்களிணையும் இராணுவத்தினரையும் ரஸ்யாவிற்கு எதிராக போராட வைத்ததுடன் ரஸ்யாவின் மிலேச்சத்தனமான ஆக்கிரமிப்பினை வெளிச்சத்திற்கு கொண்டு வந்தார். ஊக்ரேனியர்கள் அனைவரையும் ரஸ்யாவிற்கு எதிராக அணி திரட்டி போரிட்டு கொண்டிருக்கின்றார். அந்த வகையில் உலக நாடுகளின் தலைவர்கள் இன்று கவனமாக உற்று நோக்குகின்ற தலைவர்களில் இந்த உக்ரேன் ஜனாதிபதி செலன்ஸ்கியும் முக்கியமான இடத்தினைப் இருக்கின்றார். அவர் பல்வேறு நாடுகளிடமிருந்து கடன்களையும் பல்வேறு நவீன ஆயுதங்களையும் பெற்று ரஸ்யாவிற்கு எதிராக ஓர் போர் கட்டமைப்பினை ஒரு போரியல் தந்திரோபாயத்தை மேற்கொண்டு ரஸ்யாவினுடைய போரியல் முறைகளை தகர்த்துக் கொண்டிருக்கிறார்.

இதற்கு பிரதான காரணமாக அமைந்தது ஒரு தலைமைத்துவத்தின் வெளிப்பாடாகக் காணப்பட்ட முடிவெடுக்க என்ற அவருடைய திடமான நம்பிக்கை ஆகும். பல்வேறு நாடுகளின் ஆக்கிரமிப்பிற்கு உட்படுகின்றன சில சந்தர்ப்பங்களில் அந்த ஆக்கிரமிப்பிற்கு உட்படுத்தும் நாடுகளிடம் மண்டியிடுவது வழக்கம் ஆனால் இன்று வரைக்கும் ரஸ்யாவுடன் போர் புரிவதையே தன்னுடைய இறுதி முடிவாக கருதிக் கொள்கிறார். இதற்கு அவருடைய தீர்மானமானது மிகவும் பிரதானமானது.

தொலைக்காட்சியில் ஒரு நகைச்சுவை நடிகனாக நடித்ததைப் போன்று அரசியலிலும் இவர் ஒரு நகைச்சுவையான இருக்கக் கூடும் என்று சிலர் கருதினாலும் அரசியலில் ஒரு திடமான நபராக முடிவெடுப்பதில் வெற்றி கண்டு இருப்பதை காணக்கூடியதாக



இருக்கின்றது. அதாவது பல்வேறு நாடுகளும் ஆதரவு கொடுக்கத் தயங்கிய போதும் அந்த நாடுகளை எல்லாம் தன் பக்கம் கவர்ந்து இழுப்பது இவர் பெற்ற வெற்றியாக காணப்படுகின்றார். ஏனெனில் இன்று ஐரோப்பிய தேசங்கள் அனைத்தும் ஆதரவு கொடுக்காதுவிட்டால் இலகுவாக ரஸ்யாவின் பிராந்தியமாவதற்கான வாய்ப்பு காணப்பட்ட போதும் அதனை தடுப்பதில் இவர் வெற்றி கண்டிருக்கிறார். இவரது தேசிய உணர்வும் தேசியம் மீதான ஈர்ப்பும் இன்றும் ரஸ்யர்களார்களால் கைப்பற்ற முடியாத ஒரு திடகாத்திரமான தேசமாக வைத்திருப்பதற்கு உதவி இருக்கிறது என்றால் அது மிகையாகாது.

உக்ரேனிய ஜனாதிபதியிடமிருந்து உலகத்தின் பல தலைவர்கள் பல்வேறு அம்சங்களை கற்றுக்கொள்ள வேண்டியுள்ளதாக காணப்படுகின்றார்கள். ஏனெனில் ஒரு வல்லரசு நாட்டினை எளிதில் எதிர்த்து நிற்பது என்பது சாதாரண விடயம் அல்ல. அது உலகிலேயே அதிகமான நிலப்பரப்பினை கொண்ட நவீன ஆயுதங்களைக் கொண்ட ரஸ்யாவினை எதிர்த்து நிற்பதற்கு இந்த செயலானது இன்றியமையாததாகின்றது. ரஸ்ய - உக்ரைன் யுத்தம் ஒரு வரலாற்று நிகழ்வாக காணப்பட்ட போதும் பல்வேறு அழிவிற்கும் மனித உயிரிழப்புக்கும் காரணமாக அமைந்து விடுகின்றது. உக்ரைன் ஜனாதிபதி பேச்சுவார்த்தையின் ஊடாக அல்லது சமாதான வழிகளின் ஊடாக தன்னுடைய ஆளுமையை பயன்படுத்தி இந்த முரண்பாட்டை முடிவுக்கு கொண்டுவருவாரானால் அதன் பின்னும் வரவேற்கக்கூடிய ஒரு நபராக மாற்றப்படுவார்.



ஒரு சாப்பாட்டு மேசை. வருணிற்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தாள் அவனது தாய்.
“என்ன இது? எப்பவும் இந்த ரொட்டி தானா?”

வருணிற்கு இன்று வழக்கத்திற்கு அதிகமான வேலைப்பதற்றம். அது அவன் குரலின் உரப்பில் தெரிந்தது. அதைக் கண்டுகொள்ளாமலே ரொட்டிக்கு சம்பலை வைத்தாள் தாய்.

தலைக்கேறிய கோபத்தில் கோப்பையை தட்டி எறிந்தான் வருண். தவறுதலாய் கண்ணாடிக் குவளை ஒன்று சிதறியது. அது கையில் குத்தி குருதி பெருக்கெடுத்தது.



# ஒரு சின்னஞ் சிறுகதை


நிலாமகன்

“கைய விடு”
தாயை தொடக்கூட அனுமதிக்காமல் வேகமாக விலகிச் சென்றான்.

இரவு. நள்ளிரவு தாண்டியும் வருணிற்கு நித்திரையில்லை. கைவலி கொஞ்சமும் குறையவில்லை.

தூரத்தில் தாய் கையில் ஒரு மருந்தோடு தன் அறை நோக்கி வருவதை பார்த்தான். என்ன செய்வது? காயம் பட்ட கை நீட்டியபடி இருக்க கண்களை மூடி தூங்குவது போல் நடிக்க ஆரம்பித்தான் வருண்.



தொண்டரடிப்பொடியன்

ஈழ நிலப்பரப்பெங்கும் சமகாலத்தில் ஆலயங்களின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்து வருகிறது. ஆனால் அதேநேரத்தில் ஆன்மீகத்தில் நாட்டம் உள்ளவர்களின் சதவீதத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. பசியே இல்லாத ஊரில் உணவகங்களால் பயன் இல்லை. படிப்பறிவே இல்லாத இடத்தில் நூறு நூலகங்கள் இருந்தும் பயனில்லை. அது போலத்தான் பக்தி என்பது உள் மனதில் எள்ளளவும் இல்லாமல் ஆலயங்கள் ஆயிரம் அமைத்தும் என்ன பயன்?

பக்தி என்பது பகல் வேசமாக மாறிக் கொண்டிருக்கிறதென்பதே கசப்பான உண்மை. உணர்வு பூர்வமாக இறைவனுக்கு செய்கிறோம் என்கிற நிலை மாறி ஏட்டிக்கு போட்டியாக திருவிழாக்கள் செய்கின்ற நிலை அதிகரித்து வருகிறது. விரலுக்கேற்றது போலத்தான் வீக்கம் இருக்க வேண்டும் என்பதை மறத்தலாகாது.

பல்லவ அரசன் பல லட்சம் செலவழித்து, தலைசிறந்த கலைஞர்களைக் கொண்டு கலைநயம் ததும்ப பார்த்து பார்த்து ஒரு கோயிலை கட்டுகிறான். அதே நேரத்தில் பூசலார் என்கிற ஒரு ஏழை பக்தன் எந்தவித செலவுமின்றி தன் பக்தியின் அதியுச்ச வெளிப்பாட்டால் தன் கற்பனைகளையும் எண்ணங்களையும் இறை பக்தியையும் ஒன்றாக்கி உள்ளத்திலேயே ஒரு கோயிலை கட்டிக்கொண்டு இருக்கிறார். இரண்டு ஆலயங்களுக்கும் ஒரே நாளில் ஒரே சுப முகூர்த்தத்தில் கும்பாபிசேகம் செய்ய முடிவு செய்யப்படுகிறது. வேதாகங்களும் மங்கல வாத்தியங்களும் ஒலிக்க, யாகங்களும் சடங்குகளும் நடக்க, அந்தண சிரேஷ்டர்களும் அயல் தேசங்களின் அரசர்களும் அணிதிரள, அலைகடலென



திரண்ட மக்கள் வெள்ளத்தின் அரோகரா முழக்கத்துடன் அரசன் கோயில் கும்பாபிஷேகம் நடத்த முனைந்த வேளை, கண்களை மூடி தியானத்தில் இருந்த பூசலாரின் உள்ளத்தில் எண்ணங்களின் விம்பமாக மிக மிக எளிமையாக அவரது ஆலய கும்பாபி‘கமும் நடத்த ஆயத்தமாகிக் கொண்டிருந்தார். இரு கும்பாபிசேக நிகழ்வுகள். ஒரே இறைவன். எங்கே சென்றிருப்பார் கடவுள்?

அரசனின் ஆலயத்தில் நைவேத்தியங்கள் அதிகம், அலங்காரங்கள் அதிகம், அபி‘கங்கள் அதிகம், பக்தர்களும் அதிகம். ஆனால் ஆண்டவன் அங்கே செல்லவில்லை. மன்னனின் கனவில் கும்பாபி‘க திகதியை மாற்றுமாறு கூறிவிட்டு எங்கே அன்பு அதிகமோ? எங்கே பக்தி அதிகமோ? அங்கே அதாவது பூசலாரின் ஆலயத்திற்கே இறைவன் சென்றதாக அந்த புராணக்கதை முடிகிறது.

இந்த புராணக்கதை உண்மையா பொய்யா என்கிற ஆராய்ச்சிகளுக்கு அப்பால் இது எங்கே காணப்படுகிறது என்பதுதான் முக்கியம்? எந்த ஆன்மீகத்திற்காக நாங்கள் ஆடம்பரமாக செலவழித்துக் கொண்டிருக்கிறோமோ அதே ஆன்மீகம் தான் இந்த கதையை சொல்கிறது. உள்ளத்தில் கோயில் கட்டிய பூசலாரை இறைவனின் மெய்யடியார்கள் என்கிற பெருமையைப் பெறும் அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவராக வைத்து பெருமை சேர்த்ததும் அதே ஆன்மீகம் தான். இந்த கதையை கொண்ட பெரிய புராணத்தை பன்னிரு திருமுறைகளில் ஒன்றாக்கி தினமும் ஆலயம் தோறும் இறை முன்னிலையில் பாட வைத்ததும் அதே ஆன்மீகம் தான். எனவே ஆடம்பரத்திற்கோ, அலங்காரத்திற்கோ ஆன்மீகம் முக்கியத்துவம் தரவில்லை என்பதும் உண்மையான அன்பிற்கும் பக்திக்குமே ஆன்மீகம் முதன்மையளிக்கிறது என்பதும் பல்லாயிரம் வருடங்களுக்கு முன்பே நிறுவப்பட்டுள்ளது. இதனேயே கண்ணதாசன் எல்லோருக்கும் புரியுமாறு எளிமையாக சொல்லி வைத்தார்.

”ஆடை அணிகலன் ஆபரணங்கள்
ஆண்டவன் விரும்புவதில்லை.
அங்கொரு கண்ணும் இங்கொரு கண்ணும்
ஆலய வழிபாடில்லை!”

அரச மரத்திலும் ஆலமரத்திலும் குளக்கரைகளிலும் இருந்த இறைவனை அந்த இயற்கையோடு இயைந்த சூழலிலேயே வழிபடுவதுதான் பொருத்தமானது என்பதை என்று உணர்வோம் என்று தெரியவில்லை. அரசடி விநாயகர்,



ஆலடி விநாயகர் என்றெல்லாம் ஆலயங்களுக்கு பெயர் இருக்கும். ஆனால் அங்கே அரச மரமோ ஆல மரமோ இருக்காது. அவற்றை வெட்டி வீழ்த்தி விட்டு பெரிய கட்டுமானங்களோடு ஒரு கோயில் இருக்கும். ஆன்மீகத்தின் அடிப்படையையே கேள்விக்குறியாக்கிவிட்ட காரியம் இது! அருகிவரும் மரங்களையும் அதியுச்ச பயன்தரு மரங்களையும் ஆலயங்களின் தலவிருட்சங்களாக்கி, அந்த மரங்களின் நீட்சியை ஆன்மீகத்தின் ஊடாக நிலைநிறுத்தும் தார்ப்பரியத்தை கொண்ட பண்பாட்டுப் பெருமை எம்முடையது என்பதை என்றும் மறத்தலாகாது. இயற்கையும் இறையும் ஒன்றாகவே இருந்தது. அதை ஒன்றாகவே தொடர்ந்து இருக்கச் செய்யவேண்டும். அதுவே இயற்கைக்கும் நல்லது.

ஆன்மீகம் சார்ந்த செலவுகளே வேண்டாமென்பதல்ல இந்த கட்டுரையின் நோக்கம். இங்கே தவறான புரிதல் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதால் சிலவற்றை தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

உலக கட்டிடக்கலைஞர்களே வியந்து போற்றும் தஞ்சாவூர் பெருவுடையார் கோயில் ஆன்மீகத்தின் ஒரு ஆடம்பரம் தான். ஆனால் அது ஆன்மீகத்தின் தொடர்ச்சியான நிலைபேறுகைக்கு அவசியம். இராஜ இராஜன் கட்டிய தஞ்சைப் பெரிய கோயில் தேவைதான். ஆனால் தஞ்சையில் இன்னொரு பெரிய கோயில் தேவையில்லை என்பது தான் என் நிலைப்பாடு. புரியுமாறு சொல்வதென்றால் என் காதலின் சிறப்பை காட்டுகிறேனென எல்லா காதலர்களும் தாஜ்மஹால் கட்ட முடியுமா என்ன? தலைமுறைகள் கடந்தும் ஆன்மீகத்தின் மகிமைகளை கடத்த இது போன்ற சில கோயில்கள் தேவை என்பது மறுக்க முடியாத உண்மை.

தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயம் நாற்றிசை கோபுரங்களோடு தலைவாசல் கோபுரமும் சேர கம்பீரமாக காட்சியளிக்கிறதென்பதற்காக மற்ற ஆலயங்களும் பஞ்ச கோபுரங்களோடு இருக்க முனைவது சரியா? ஆன்மீகம் பணிகளுக்கு சரிநிகராக அறப்பணிகளையும் செய்வதனால் உருவான மகாபுண்ணியம் அந்த ஆலயத்தின் சூழலையும் அழகாக்கிறது. ஆனால் எமது மண்ணில் பெரிய கட்டுமானங்களோடு காணப்படும் ஆலயங்களில் ஒரு வேளைப்பூசை கூட ஒழுங்காக நடக்காத ஆலயங்களும் உள்ளன. பன்னிரு ஆண்டுகளுக்கொருமுறை வரும் கும்பாபிசேகங்களையும், பன்னிரு மாதங்களுக்கு ஒரு முறை வரும் மகோற்சவத்தையும் விட முக்கியமானது நித்திய பூசை. அந்த

பூசை அதற்குரிய காலக்கிரமத்தில் நடக்கும் போது தான் அந்த தெய்வம் குளிர்ச்சியடைகிறது. இதற்கு தேவை அர்ச்சகர்களதும் பக்தர்களதும் அர்ப்பணிப்பும் பக்தியும் மட்டுமே தவிர வேறெந்த செல்வமும் அல்ல. ஆனால் இதற்குத்தான் பல ஆலயங்களில் பற்றாக்குறை இருக்கிறது.

சாதி மத வேற்றுமைகள் இன்றும் ஆலயங்களூடாக சமூகப் பரப்பில் பிரிவினையை ஏற்படுத்துகின்றன. ஆனால் சாதியைக் காரணம் காட்டி ஆலயத்திற்குள் அனுமதி மறுக்கப்பட்ட நந்தனாருக்காக நந்தியே விலகி சிவதரிசனத்திற்கு வழிவகை செய்தாக ஆன்மீகம் சொல்கிறது. இந்த நந்தனார் சரிதம் ஊடாக ஆன்மீகம் என்ன சொல்கிறது தெரியுமா? இறைவன், எந்த பிறப்பிலும் பேதம் பார்ப்பதில்லை. உருவத்திலும் பேதம் பார்ப்பதில்லை. ஆனால் மனிதர்கள்தான் தங்கள் மனித இனத்திலேயே வேறுபாடு வைத்திருக்கிறார்கள். அவர்கள் செய்யும் தவறுகளுக்கு பழியை ஆண்டவன் மீது போடுகிறார்கள். நந்தனாரை ஆலயத்திற்குள் வைத்து இன்றும் வழிபடுகிறோம். ஆனால் அவர்சார்ந்த சாதியினருக்கு இன்றும் பல ஆலயங்களில் அனுமதி இல்லை. அதே போலத்தான் கண்ணப்பரும். எனவே ஆன்மீகத்தின் அடிப்படையை உணர்ந்து அனைவருக்கும் சமத்துவத்தை ஆலயங்களூடாக ஆன்மீகத்தில் உறுதி செய்ய வேண்டும்.

ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு ஆன்மீகத்தை கடத்தும் முக்கிய இடமாக ஆலயங்களே இருக்கின்றன. முதியவர்களிடமிருந்து இளையவர்கள் ஆன்மீகத்தின் அடிப்படைகளை அறிந்துகொள்ள ஆலயங்களே உதவுகின்றன.

யார் இளைஞர்கள்?

ஒரு மனிதனின் இளமைப்பருவமானது 13 வயது தொடக்கம் சுமார் 30 வயது வரையான காலகட்டத்தை உள்ளடக்கி இருக்கும் என வரையறை செய்யலாம். இந்த வயது வரையறை தொடர்பில் உளவியலாளர்களிடையே பல அபிப்பிராய பேதங்கள் உண்டு.



இருந்தாலும் இந்த இளமைப் பருவத்திற்குள் ஒரு மனிதனின் பதின்ம பருவமும் கட்டிளமைப்பருவமும் உள்ளடங்கி காணப்படும் என்பதில் உறுதியான நிலைப்பாட்டிற்குள் வரமுடியும்.

இளமைப் பருவம் என்பது முதிர்ச்சிக்கும் பிள்ளைப் பருவத்திற்கும் இடையிலான நிலைமாறும் பருவம் ஆகும். அதாவது முதிர்ச்சியின் அடையாளங்களும் பிள்ளைத்தனத்தின் தன்மைகளும் கலந்திருக்கும் பருவம். ஒரு மனிதனின் வாழ்வில் புயலடிக்கும் பருவம், உள்ளகக் குழப்பம் நிறைந்த பருவம், புரட்சிகரமான பருவம், கட்டுக்கடங்காத பருவம் என இப்பருவத்தினை வர்ணிப்பர். ஒருவனது இளமைப் பருவம் சீரிய முறையில் கட்டமைக்கப்பட்டு விட்டால் அவனது எதிர்காலம் என்பது மிகச்சிறப்பாக இருக்கும் என்பது நாம் அனுபவ ரீதியாக கண்ட உண்மையாகும்.

இளைஞர் பருவத்தில் ஏற்படும் கோளாறுகளையும் பிறழ்வுகளையும் எதிர்கொண்டு, அதனை ஒரு ஆரோக்கியமான முறையில் பக்குவப்படுத்துகின்ற வழிப்படுத்துகின்ற சக்தி ஆன்மீகத்திற்கு உண்டு. அந்தவகையில், சமயங்கள் போதிக்கின்ற ஆன்மீகக் கடமைகளில், வழிபாடுகளில் இளைஞர்கள் தங்களை முற்றாக ஈடுபடுத்தி தங்களை வளப்படுத்திக் கொள்ள வேண்டும். இன்று ஆன்மீகத்தை விட்டும் தூரமான, ஆன்மீக வறுமையுடன் வாழுகின்ற இளைஞர்களே உள நோய்களுடன் காணப்படுகின்றனர். ஒரு மனிதனுடைய உள்ளத்தை வளப்படுத்துவதிலும், அதன் நோய்களைக் குணப்படுத்துவதிலும், அதில் அமைதியை ஏற்படுத்துவதிலும் ஆன்மீகத்திற்கு நிகரானதொன்று கிடையவே கிடையாது.

எனவே, மாறிக்கொண்டு செல்கின்ற இன்றைய உலகில், சமூகத்தின் முதுகெலும்பாகவுள்ள இளஞ்சமுதாயத்தை, அது எதிர்கொள்கின்ற சவால்கள் மற்றும் பிரச்சினைகளிலிருந்து பாதுகாத்து, உள ஆரோக்கிமுள்ள நல்ல வளமான சமூகமாக உருவாக்கி





எடுக்க ஆன்மீக நாட்டத்தை அவர்களிடம் ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது.

இளைஞர்களுக்கு எவ்வாறு ஆன்மீகத்தின் தேவை உள்ளதோ அதுபோல ஆன்மீகத்திற்கும் இளைஞர்களின் தேவை உள்ளது. ஆலய சூழலை சுத்தமாக வைத்திருக்கவும், பூக்கள் கொய்யவும், மாலைகள் கட்டவும், சுவாமியை திருவீதியுலா வரச்செய்வதும் என்று சரியைத் தொண்டுகள் செய்வதற்கு இளைஞர்களும் யுவதிகளும் தேவை. அதை அவர்கள் வேலையாக செய்யாமல் பணியாக செய்கின்ற போது அந்த ஆலய சூழல் மகத்துவம் பெறுகிறது.

இறக்குமதி செய்யப்பட்ட தெய்வங்களை விட குல தெய்வங்களும் கிராமியத் தெய்வங்களுமே எமது பண்பாட்டினதும் வரலாற்றினதும் தொடர்ச்சிக்கும் மேன்மைக்கும் உதவும். வழக்கொழிந்து போய்க்கொண்டிருக்கும் அந்த கிராமியத் தெய்வ மற்றும் குல தெய்வ வழிபாடுகளை மீளப் புதுப்பிக்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது.

எமது மண்ணில் இன்றைய நாட்களில் சிறியேன் அவதானித்த சில விடயங்களின் தொகுப்பே இந்த கட்டுரை. இங்கு யாரையும் குற்றம் சுமத்துவதோ, குறை காண்பதோ நோக்கமல்ல. கந்தபுராண கலாச்சாரத்தை கொண்ட எமது மண்ணின் ஆன்மீக பலத்தை மீள அதிகப்படுத்த வேண்டும் என்பதே எனது பணிவான விண்ணப்பம்.

**'அவனருளாலே அவன்தாழ் வணங்கி'**



| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 2 | 3 | 4 | 5 | |
| | | | 6 | | | | 7 |
| 8 | 9 | 10 | | 11 | | | |
| 12 | | | | | | 13 | |
| | | | | | 14 | | |
| | 15 | | 16 | | 17 | | 18 |
| 19 | | | 20 | 21 | | | |
| 22 | | | | 23 | | | |




### மேலிருந்து கீழ்

1- வைத்தியசாலை
6- தென்னிந்தியாவின் புகழ்பெற்ற விஷ்ணு கோவில்
8- பெண்
11- ஒரு மரம் (குழம்பி)
12- கலியாணம்
13- வேகம்
14- பசளை
15- அதிகம் பேசுபவளை இவ்வாறு சொல்வர்
17- இது ஆனாலும் கசக்கிக் கட்டச்சொல்வர் (குழம்பி)
19- கூந்தல் (திரும்பி)
20- விருந்தினர்
22- அரவம்
23- எண்ணெயில் வதக்கிய உணவு

### இடமிருந்து வலம்

1- இதை நம்பி ஆற்றில் இறங்கக் கூடாதாம்
2- வாழ்த்து
3- வருடம் (ஆண்டு)
4- மந்தாரமான காலநிலை
5- யாழ்ப்பாணத்தில் பிரபலமான வேள்வி நடக்கும் கிராமம் (குழம்பி)
7- நாள்
9- மச்சம்
10- கௌரவம் (குழம்பி)
14- பொறியியலாளர்
15- மணம்
16- பன்னிரண்டு அங்குலம் (திரும்பி)
18- பெண்
19- சடலங்களை கிடத்தும் பாய் (திரும்பி)
21- அளவில் சிறிய மூட்டை (திரும்பி)

**சரியான விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி**

www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

### குறுக்கெழுத்துப்போட்டி - 45 விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 எ | ரி | 2 பொ | 3 ரு | 4 ள் | | 5 ல் | 6 பு |
| ட் | | 7 ம் | க | ரு | 8 மி | | ப் |
| 9 ட | ல் | ம | | 10 அ | ள | 11 வீ | டு |
| ப் | | 12 லா | 13 ப | | 14 கு | ட | அ |
| 15 ப | த | ட் | ட | 16 ம் | | ணை | |
| ன் | | 17 ட | கோ | ரி | | 18 ன் | 19 உள |
| | | 20 ம் | ட் | ச | ட | | ட |
| 21 சா | மி | | 22 டி | த | | 23 ஆ | ல் |



# ஈழச் சூழலியல்

த.விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

## நீர் நிலைகளை திருத்தல்

குறைந்த ஒட்சிசன் நிர் நிலைகளில் காணப்படுவதால் குளத்தின் அடியில் படிந்துள்ள படிவுகளிலிருந்து போசனைப் பதார்த்தங்கள் வெளி யேற்றப்படுவதனால் வெளியிலிருந்து வரும் போசணைகளைக் குறைத்தாலும் பல மீள்சீர்திருத்தும் நடவடிக்கைகள் நிறைந்த பலனைக் கொடுக்கவில்லை. உள் படிவுகளிலிருந்து வெளிவரும் பொசுபரசு வருடாந்த ரீதியாக வெளியே இருந்து வரும் பொஸ்பரசையை விட 90% அதிகமானதாகும். இத்தகைய நிலைகளில் படிவுகளை அகற்றலே பொருத்தமான தீர்வாகும். 1999 இல் கண்டிக் குளம் வெகுவாக மாசடைந்தது. அதன் நீர் மங்கலாகவும் மேற்பரப்பில் அல்காக்களும் காணப்பட்டன. குளத்திலிருந்து அழுகிய மணமும் வீசியது. மீன்கள் அதிகம் பாதிக்கப்பட்டதுடன் பறவைகளும் அங்கு காணப்படவில்லை, பக்டீரியாக்கள் நிரில் காணப்பட்டன. இந்த நிலைக்குக் காரணம் அருகிலுள்ள தொழிற்சாலைளில் இருந்து விடுவிக்கப்படும் தீங்கு விளைவிக்கும் பதார்த்தம் கொண்ட கழிவு நீராகும். அத்துடன் விலங்குக் கழிவுகள் மற்றும் நிலத்துடன் சேர்க்கப்பட்ட தீங்கு விளைவிக்கும் பதார்த்தங்களை மழைநீர் கழுவிக் கொண்டு குளத்தில் சென்றடைவது இன்னொரு காரணமாகும்.

இக்குளத்தின் சீர் திருத்த நடவடிக்கைகள் 2003 இல் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் தலைமையில் கண்டி நகர உல்லாசப் பயண விடுதிகளின் ஒத்துழைப்புடன் ஆரம்பமானது. தேவையான நிதியும், விஞ்ஞான ரீதியான ஒத்துழைப்பும் கிடைத்தன. இதன் போது குளத்தைத் தோண்டி படிவுகளை அகற்றுவதிலும்,



தொழிற்சாலைகளில், உல்லாச விடுதிகளில் இருந்து வரும் கழிவுகளில் காணப்படும் குளத்தை மாசுபடுத்தும் பதார்த்தங்களின் அளவைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளுக்கும் 38 மில்லியன் ரூபாய்கள் செலவிடப்பட்டன. 2008 ம் ஆண்டில் குளத்தின் நீர் தெளிவாகவும், அல்காக்கள் குறைந்தும், மீன்கள் பெருகி, பறவைகளின் வருகையும் காணப்பட்டன.

நோர்வேயில் காணப்படும் பெரிய எம்ஜேஸா (Mjosa) குளம் 1970 இல் நற்போசனைக்குள்ளானது. 1975 இலி சையனோபக்ட்றீரியா, ஒஸ்சிலோடாரியா கணிசமாக அதிகரித்து குளத்தின் நீர் விரும்பத்தகாத மணத்தையும், சுவையையும் கொடுத்து இக்குளத்தின் மீள் திருத்தத்துக்கான தேவையை ஏற்படுத்தியது. எனவே தகவல்கள் திரட்டப்பட்டு நீர் மாசுபடலுக்கான காரணங்கள் கண்டறியப்பட்டன. நகரத்திலிருந்தும், தொழிற் சாலைகளிலிருந் தும், விவசாய நடவடிக்கைகளிலிருந்தும், காட்டு மற்றும் ஏனைய நிலங்களிலிருந்தும் முறையே, **36% 28% 11% 22%** ஆன பொசுபரசு (P) குளத்தை அடைவதாகத் தெரிய வந்தது. புதிய கழிவு நீர் சுத்திகரிப்பு நிறுவனம் 1980 இல் நிறுவப்பட்டு **90%** ஆன பொசுபரசை அகற்றக் கூடியதாக இருந்தது. இதனால் 0.015 - 0.018 mg/L ஆக இருந்த பொசுபரசு 0.011 mg/L ஆக குறைவடைந்தது. அல்காக்களின் வளர்ச்சியில் சயனா பக்டீரியாக்களை விட டயட்டம்கள் கூடிய வளர்சசியைக் காட்டியது.


சுவிட்சர்லாந்தில் சுயிரிச் குளத்தில் 1950 ஆண்டளவில் பொசுபரசின் செறிவானது 0.03 mg/L யை விடக் குறைவாக இருந்தது. ஆனால் சனத்தொகை அதிகம் கொண்ட நகர பிரதேசங்களில் இருந்து கழிவு நீர் இக் குளத்தை சென்றடைந்ததால் 1965 இல் 0.09 mg/L ஆக அதிகரித்தது. கழிவுநீர் சுத்திகரிப்பு முறையில் பெரிக் அல்லது அலுமினியம் சேர்க்கப்பட்டு **85%** ஆன பொசுபரசு அகற்றப்பட்டு குளத்தின் பொசுபரசு செறிவு குறைக்கப்பட்டது. இரசாயனப்படிவாக்கல் மூலம் குளத்தில் பொசுபரசை வெற்றிகரமாக குறைத்த முதற்தடவை இதுவாகும்.



1950 க்குப் பிறகு ஜப்பானில், தொழிற் சாலைகளிலிருந்து பாரமூலகங்கள் வெளியேற்றப்பட்டதாலும், உணவு மற்றும் கடதாசி தொழிற் சாலைகளிலிருந்து போசனைகள் வெளியேற்றப்பட்டதாலும் குளங்களின் நீரின் தன்மை மோசமாக மாறியது. 1990 களில் 148 குளங்களில் நடாத்தப்பட்ட ஆய்வில் 28 குளங்களில் சயனோ பற்றீரியாக்களின் வளர்ச்சி அதிகரித்ததை அவதானிக்க முடிந்தது.

ஜப்பானின் பெரிய குளமான பிவா குளம் கியோடோ, ஓசக்கா போன்ற நகரங்களுக்கு குடிநீரை வழங்கியது. இக்குளம் ஆரம்பத்தில் குறைவான போசனையைக் கொண்டதாகக் காணப்பட்டாலும் கைத்தொழிலாக்கம், நகரமயமாக்கம் என்பன மூலம் வெளியாக்கப்பட்ட போசனைகள் காரணமாக நற்போசனை நிலைக்கு மாறியது. 1977 இல் இருந்து குளத்தின் நீர் நீர்த்தாவரங்கள் காரணமாக தெளிவற்ற நிலைக்கு மாறியது. சுத்திகரிக்கப்பட்ட நீர் விரும்பத்தகாத மணத்தைக் கொடுத்தது. ஒவ்வொரு வருடமும் அல்காக்களின் மலர்ச்சி ஏற்பட்டது.

எனவே 1980 களில் இருந்து அரசாங்கம் பிவா குளத்தின் அதி போசனையைத் தவிர்க்க ஒரு சட்டமூலத்தை நடைமுறைப்படுத்தியது. இச்சட்டம் விவசாய, கால்நடைகளிலிந்து வெளியேற்றப்படும் கழிவு நீரை மட்டுப்படுத்தவும், பொசுபரசு கொண்ட செயற்கைத் தூய்மையாக்கிகளை தடை செய்யவும் உதவியது. எனினும் குளத்து நீரின் பொசுபரசு, நைதரசன் இன் அளவு வெகுவாகக் குறைவடையவில்லை. அல்கா மலர்ச்சி ஏற்படும் தடவைகளின் எண்ணிக்கையும் குறைவடையவில்லை. நீரேந்தும் பரப்புகளிலிருக்கும் விவசாய பகுதி களிலிருந்து வரும் போசனையைத் தேவையான அளவுக்குக் கட்டுப்படுத்த முடியாமையே இதற்குக் காரணமாகும்.





2012 இல் ஒஹியோ மாநிலத்தில் நச்சு அல்காக்கள் காணப்பட்ட காரணத்தால் உல்லாசப் பிரயாணிகளுக்கு மூடப்பட்டிருந்த Grand lake st. Marys இன் P அளவைக் குறைப்பதற்கு அலுமினியம் சல்பேற்று இடத் தீர்மானிக்கப்பட்டது. இதன் மூலம் பொசுபரசு 50%த்தினால் குறைவடைந்தது. இதற்கான செலவு 8.5 மில்லியன் அமெரிக்க டொலர்கலாகும். நீரேந்தும் பகுதிகளிலிருந்த அதிக எண்ணிக்கையான விலங்குப் பண்ணைகளே இந்த பொசுபரசு அதிகரிக்கக் காரணமென அறியப்பட்டது. பயிர் மற்றும் விலங்கு உற்பத்தி தொடர்ச்சியாக நடைபெறும் போது சூழல் பாதுகாப்புக்கான முயற்சிகளும் ஒருங்கே தொடரப்பட வேண்டும். உணவும் சுத்தமான நீரும் உயிர் வாழ அவசியமாகும்.

*ஆராய்வோம்..................*

## சீனாவில் 900 ஆண்டுகள் பழமையான மரப்பாலம் எரிந்து சேதம்

சீனாவின் கிழக்கே புஜியான் மாகாணத்தில் பிங்னன் கவுண்டி பகுதியில் 960-ம் ஆண்டு முதல் 1127-ம் ஆண்டு வரை சாங் வம்சம் ஆட்சி செய்தது. அந்த காலகட்டத்தில் மரத்தில் உருவான நீண்ட மரப்பாலம் ஒன்று எழுப்பப்பட்டது. இது 98.3 மீட்டர் நீளம் கொண்டது.

இந்த மரப்பாலம் திடீரென்று தீப்பிடித்து எரியத் தொடங்கியது. இதுபற்றி தகவல் அறிந்ததும் தீயணைப்பு படையினர் விரைந்து சென்று தீயை அணைக்கும் முயற்சியில் ஈடுபட்டனர். சுமார் ஒரு மணிநேர போராட்டத்துக்கு பிறகு தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. தீப்பிடித்து எரியத் தொடங்கியதும் முதல் 20 நிமிடத்திலேயே மரப்பாலம் எரிந்து கீழே விழத் தொடங்கியது. நீண்ட வளைவுகளை கொண்ட இந்த பாலம் இயற்கை பேரிடர் காரணமாக எரிந்திருக்க வாய்ப்பு இல்லை என்று கூறப்படுகிறது.



வனான் என்று பெயரிடப்பட்டுள்ள இந்த பாலம் உலகின் அமைதிக்கான பாலம் என்றும் அழைக்கப்படுகிறது. பொதுவாக பாலங்கள் கற்களால் கட்டப்படும். கலாச்சார முக்கியத்துவம் கொண்ட இந்த பாலத்தை மரத்தின் மூலம் தொழில்நுட்பத்துடன் வடிவமைத்திருந்தனர்.

காவ்யமோகன்

# சித்திராங்கதா

## புள்ளி மான் கொம்பு

யாழ்ப்பாணத்தில் அறுபத்து மூன்று நாயன்மார்களிற்கும் ஒரே இடத்தில் மடாலயம் அமைக்க வேண்டுமென்று ஆசை கொண்டான் யாழ்வேந்தன் குணபூஷண சிங்கையாரியச் சக்கரவர்த்தி. அவனது மந்திரி ஒருவரினால் அந்த ஆசை நிறைவேற்றப்பட்டது. அறுபத்து மூவரும் ஒன்றாய் மடமிருந்த அந்த இடம் அன்றுமுதல் "நாயன்மார்க்கட்டு" என்று வழங்கப்பட்டது.

நல்லூர்க் கோட்டைக்கு நேர் கிழக்கே அமையப்பெற்றிருந்த நாயன்மார்க்கட்டிற்கு சங்கிலியனும் இராஜமந்திரியாரும் இந்த நடுநிசிப்பொழுதில் அவசரமாக வந்தடைந்தனர்.

ஒளிச் சுடர்களால் மின்னிக் கொண்டிருந்த ஒரு மண்டபத்தின் முன் அவர்களது இரதம் வந்து நின்றது.

இராஜரதம் வாசலில் வந்ததைக் கண்டதும் ஆச்சாரமான ஓர் இந்து மதகுரு அணியினர் அவசரமாக வாசலை நோக்கி வந்து மன்னனை வரவேற்றனர்.

வணங்கிய கரங்களோடு அவர்கள் பாதங்களில் வீழ்ந்து வணங்கினான் சங்கிலியன்.

"தலை சிறந்த வேந்தன் தயவால் இந்த நாயன்மார்க்கட்டு வைத்தியகூடம் நன்முறையில் இயங்கி வருகிறது. தற்சமயம் தங்கள் மேலான வரவு எமக்கு மகிழ்ச்சி தருகிறது" என்றார் அந்தக்கூட்டத்தின் தலைமை மதகுரு.

நாயன்மார்க்கட்டு வைத்திய கூடத்தின் தலைமை வைத்தியர் அவர்தான். அந்தக்கூட்டத்தில் இருந்தவர்கள் அனைவருமே அங்கு சேவைபுரிகின்ற வைத்தியக் குருக்கள்மார் ஆகும்.

"எல்லோரையும் சந்தித்தது எனக்கும் சந்தோசம் வைத்தியரே. தாங்கள் இருக்கும் இடத்தில் பணிகள் யாவும் தடையின்றி நடக்கும் என்கிற துணிவிலே இங்கு வருவதற்கு போதிய நேரம் இல்லாமல் போனாலும் அது குறித்து வருத்தமின்றி இருந்தேன்"

என்று மலர்ந்த முகத்தோடு கூறினான் சங்கிலியன். வைத்திய குருமார்களின் சகல உபசரிப்புக்களையும் ஏற்றுக்கொண்டு சங்கிலியன் மண்டபத்திற்குள் நுழைந்தான்.

அனைத்து ஊழியர்களும் தாங்கள் ஆற்றிக்கொண்டிருந்த காரியம் மறந்து மன்னர் எதிர்ப்பட வணங்கி நின்றனர். எல்லோரையும் வணங்கியபடியே சங்கிலியனும் இராஜமந்திரியாரும் அந்த மண்டபத்தின் உப்பரிகை நோக்கி விரைந்து கொண்டிருந்தனர்.

அந்த மண்டபத்தின் உப்பரிகையில் (மேல்மாடத்தில்) திடீர் சுகவீனமுற்று சிகிச்சை பெறுகிற பெருவணிகர் எச்சதத்தரை சந்திக்க வேண்டும் என்கிற அவசரத்திலே சங்கிலியனும் இராஜமந்திரியாரும் இந்நடுநிசிப் பொழுதிலும் நாயன்மார்க்கட்டு வைத்தியகூடத்திற்கு வரவேண்டி இருந்தது.


உப்பரிகையில் ஒரு தனியான இடத்தில் சோகமும் பதற்றமும் கலந்த முகத்தோடு ஏதோ சிந்தனையில் உறக்கமின்றி கிடந்தார் எச்சதத்தர். அருகில் இருந்த சுவரில் தெரிந்த கொம்புகள் விரிந்த ஓர் அழகிய மானின் ஓவியத்தை அவ்வளவு நேரம் கூர்மையாக பார்த்துக் கொண்டிருந்தார். அந்த ஓவியத்தின் சிந்தனையில் இருந்தவரிற்கு மன்னர் வந்த விடயம் கூடத் தெரியவில்லை.

அருகில் நின்ற வைத்திய சேவகனே எச்சதத்தரின் சிந்தனையினை கலைத்து மன்னர் வந்து நிற்பதை அவரிற்கு உணர்த்தினான்.

நிலை தடுமாறி திடுமென எழும்ப எத்தனித்தவரை சங்கிலியன் அவசரமாக இடைமறித்தான்.

“நீங்கள் ஓய்வெடுங்கள் பெருவணிகரே, வன்னியர் விழா நெருக்கடிகளை நான் தங்களின் மேல் அளவுக்கதிகமாய் சுமத்தி விட்டேன் போலும். தங்களின் இந்த நிலைக்கு நானும் ஒரு காரணமாகி நிற்பதை நினைத்து பெரிதும் வருந்துகிறேன்” என்றான் சங்கிலியன்.

“ஐயகோ, அப்படி அல்ல வேந்தே, அரச கடமைகளை ஆற்ற நான் எக்காலத்திலும் பின்னின்றவனல்ல.? வன்னியர் விழா எனக்கு எந்த நெருக்கடியையும் தரவில்லை. ஆனால் இது எதனால் என்றும்



தெரியவில்லை. திடீரென்று மார்பில் ஏற்பட்ட ஒரு வலி என்னை இயங்கவிடாமல் சிலகணம் செய்து விட்டது. நிலைமறந்து மூர்ச்சையாகிப் போய்விட்டேன். யாரோ சிலர்தான் என்னை இங்கு அழைத்து வந்தனர். வைத்தியகுருவின் சிகிச்சையால் இப்போது மீண்டும் உயிர் பெற்று நிற்பது போல் உணர்கிறேன்" என்றார் எச்சதத்தர்.

"தங்களைப்போன்ற அர்ப்பணிப்பு மிக்கவர்கள் இந்த தேசம் எங்கும் பரந்திருக்கிறார்கள். வைத்தியகுருவும் அப்படிப்பட்டவர்தான். உங்களைப் போன்றோரால் தான் என்னால் அரசவையில் இருந்து நிம்மதியாக நாடாளமுடிகிறது. தங்கள் தேகநலம் எனக்கும் இந்த தேசத்திற்கும் மிகத்தேவையானது பெருவணிகரே" என்று எச்சதத்தர் தோள்களைத்தட்டி பெருமிதத்தோடு கூறினான் சங்கிலியன்.

இராஜமந்திரியாரும் அதை ஆமோதிப்பது போல் எச்சதத்தரை பார்த்து தலையசைத்தார்.

"அது இருக்கட்டும் பெருவணிகரே, தங்கள் ஆடற்புத்திரி சித்திராங்கதா எங்கே? இங்கு காணவேயில்லையே?" என்று சங்கிலியன் கேட்டதும் எச்சதத்தர் முகத்தில் மீண்டும் அந்தப்பழைய சோகம் பற்றிக் கொண்டது.

சுவரில் இருந்த அந்த மானின் ஓவியத்தை திரும்பி பார்த்தார். அவர் கண்கள் மெள்ள மெள்ள ஈரமாகிக்கொண்டிருந்தன.

"என்ன பெருவணிகரே, என்ன ஆனது தங்கள் புதல்விக்கு? இங்ஙனம் தங்கள் முகம் வேதனை கொள்வது ஏன்?"
என்று அவசரமாக கேட்டான் சங்கிலியன்.

"அரசே... அந்த மானைப் பாருங்கள், எத்தனை அழகு அதன் விரிந்த கொம்புகள். அந்த கொம்புகளை பார்ப்பவர்கள் எல்லோருக்குமே ஒரு மகிழ்ச்சி உண்டாகும். ஆனால் எனக்கோ அந்த கொம்புகளை பார்க்கும் போது மிகுந்த அச்சமாக இருக்கிறது வேந்தே"

சித்திராங்கதாவினை நினைக்கையில் அந்த அழகிய கொம்புகள் ஏதோ கொடூர ஆயுதம் போல் எனக்குத் தெரிகின்றன....

"எதனால் அங்ஙனம் கூறுகிறீர்கள் பெருவணிகரே?சித்திராங்கதாவின் அழகில் அப்படி என்ன ஆபத்தைக் கண்டீர்?" என்று கேட்டார் இராஜமந்திரியர்.

"சொல்கிறேன் மந்திரியாரே, நிச்சயம் சொல்கிறேன். அதைச் சொல்வதற்காகத்தானே தங்களை அவசரமாக சந்திக்க வேண்டும் என்று காத்தவராயனிடம் சொல்லியிருந்தேன். என் மகள் தன்னையறியா காரியங்களை ஆற்றத்துவங்கி விட்டாள். இப்படி எங்ஙனம் அவள் ஆனாள் என்று மட்டும் எனக்கு இப்போது வரை புரியவில்லை"
என்று கூறியவர் அதற்கு மேல் பேசமுடியாமல் அமைதியானார்.

மன்னரும் அமைதியாக காத்திருந்தார்.

“மன்னிக்க வேண்டும் மன்னா, நான் நடந்ததை இப்போது கூறுகிறேன். வன்னியர் விழா நிறைவுற்று நான் இல்லம் வந்த வேளை சித்திராங்கதா அங்கிருக்கவில்லை. என்ன ஏது நடந்தது என்றறியாமல் அலைந்து திரிந்தேன். ஊருக்குள் சிலர் சில வேண்டாத கதைகள் சொன்னனர். அவர்கள் கதைகள் எல்லாம் கேட்ட பின்னரே என் மார்பில் அப்படியொரு வலி ஏற்பட்டது. பின் இங்கு வந்தபின் இதோ.. இந்த சேவகன் மூலந்தான் நானே உண்மைகளை அறிந்து கொண்டேன்” என்று அங்கு நின்றுகொண்டிருந்த சேவகனை காட்டி கூறினார் எச்சதத்தர்.

“சட்டநாதர் கோயிலில் பாதுகாப்பு பணியில் இருக்கையில் ஒரு நாள் சித்திராங்கதாவை அங்கு கண்டதாய்க் கூறினான்.” என்று தொடங்கி அந்த சேவகன் மூலம் தான் அறிந்த அனைத்தையும் மன்னருக்கும் மந்திரியாருக்கும் முழுமையாக கூறிக்கொண்டிருந்தார் எச்சதத்தர்.

“சிறிய வயதிலே தன் தாயை இழந்த வலிக்கு ஒரு மீட்சியாய் இருக்கட்டும் என்றே அவளிற்கு ஆடற்கலையை பயிற்றுவிக்க நினைத்தேன். அந்தக் கலை கொடுக்கும் இன்பம் அவளிற்கு ஆறுதல் அளிக்கும் என்று நம்பினேன். அங்ஙனமே ஆடலரசியாய் இன்பத்திற்கு குறைவின்றி வளர்ந்தாள். ஆனால் இன்று இங்ஙனம் ஓர் அபாயத்திற்கு அந்தக்கலையே அவளை அழைத்துவரும் என்பதை நான் சற்றும் எதிர்பார்க்கவில்லை வேந்தே..” என்று கூறி கண்கலங்கினார் எச்சதத்தர்.

எச்சதத்தர் கூறுவதை பொறுமையுடன் கேட்டுக் கொண்டிருந்த சங்கிலியன்

“வருந்தாதீர்கள் பெருவணிகரே, சித்திராங்கதாவின் கோபம் நியாயமானதுதான். அவள் ஆடற்திறமை என்பது அவனியிலுள்ள அனைவராலும் கொண்டாடப்பட வேண்டியதே! அந்த அரங்கேற்ற விழாவை நிகழ்த்த முடியாமல் போன சூழ்நிலை ஏற்பட்டதை எண்ணி நான் இன்றும் வருந்திக்கொண்டிருக்கிறேன். அவ்வளவு அபாரமானது அவள் திறமை. அந்தத்திறமைக்கு ஒரு தடைக்கல் உண்டான போது அவளிற்குள் எழுந்த கோபம் நியாயமானது என்பதால் நான் அவள் விடயத்தில் பொறுமை காத்தேன். ஆனால் அந்தக் கோபத்தில் இருந்த நியாயத்தை யாரோ இங்ஙனம் இடையில் தவறாக திசை திருப்பியுள்ளார்கள் என்பதை என்னால் கூட நம்ப இயலவில்லை.”

அதுவரை அமைதி காத்த ராஜமந்திரியார்

“மன்னா, சித்திராங்கதாவை இங்ஙனம் மடைமாற்றம் செய்து நம் எதிரிகளால் எதை சாதித்துவிட முடியும் என்று நினைக்கிறீர்கள்? மாவீரன் வருணகுலத்தான் வீரத்தில் மட்டுமல்ல உள்ளத்திலும் திடம் மிக்கவர். பகைவர்களின் இப்படியான வலைகளில் சிக்கிக் கொள்பவர்

அல்ல அந்த மாவீரன். ஆதலால் இது குறித்து தாம் அதிகம் வருத்தம் கொள்ளத் தேவையில்லை பிரபு" என்று உறுதியாய்க் கூறினார்.

பின் கலங்கிய கண்களோடு நின்ற எச்சதத்தரை நோக்கி "பெருவணிகரே தங்கள் மகள் மாவீரன் வருணகுலத்தானுடன் வன்னிமாளிகையிலோ அல்லது வேறு எங்கிருந்தாலும் அது தங்கள் மகளிற்கு பாதுகாப்புத்தான். தஞ்சை தளபதியாலே இன்று என்புதல்வி மாருதவல்லி என்னுடன் இருக்கின்றாள். அந்த உறுதியிலே கூறுகிறேன். தாங்கள் அமைதியாக ஓய்வெடுங்கள்." என்று பெருவணிகரை தேற்றும்படி கூறினார்.

"மாவீரன் வருணகுலத்தான் அப்படிப்பட்டவர் என்பது உண்மைதான் மந்திரியாரே, ஆனால் என் புதல்வி சித்திராங்கதா ஒரு பேதைப்பெண். அவளது ஏதாவது சிறுசெயல் நாட்டில் பேரழிவை உண்டாக்கிவிடுமோ என்கிற பயம்தான் என் உள்ளத்தில் இப்போது வியாபித்திருக்கிறது. அப்படியேதும் கோரசம்பவம் நிகழ்ந்து அதற்கு என் மகளே காரணம் என்கிற கொடும்பழியை என் செவிகள் கேட்கக் கூடாது மன்னா, அதனால்த்தான் தங்களிடம் தயவாய் ஒரு வேண்டுகோள் விடுக்கிறேன்." என்று இரஞ்சும் குரலில் கேட்டார் பெருவணிகர் எச்சதத்தர்.

"என்னிடம் கேட்க ஏன் தாமதிக்கிறீர்கள் பெருவணிகரே, தங்கள் உள்ளத்து நேர்மைக்கு எனக்கு சாட்சியம் தேவையில்லை. தாராளமாய்க் கேளுங்கள்."

"மன்னா, மேலும் மோசமான அசம்பாவிதங்கள் ஏதும் நேர்ந்துவிடாமல் இருக்க வேண்டும் என்றால், என் உடல்நிலை சீராகும் வரை என் மகளை அரண்மனையில் தங்கவைக்க வேண்டும்!"

"நிச்சயம் பெருவணிகரே, சித்திராங்கதா அதுவரை அந்தப்புரத்திலே இருக்கட்டும். எந்த ஒரு குறையும் இன்றி ராணி அவளை பார்த்துக் கொள்வார்."

"இல்லை மன்னா..!"
என்று அவசரமாக அதை மறுத்தார் எச்சதத்தர்.

"அது சாத்தியமாகாது.. அந்தப்புரத்தில் தங்க அவள் எந்நிலையிலும் சம்மதிக்க மாட்டாள். அரசவை மீதும் அங்கிருப்பவர்கள் மீதும் அவளிற்குள்ள கோபம் அதற்கு அவளை அனுமதிக்காது. அங்ஙனம் அவள் அந்தப்புரத்தில் இருப்பதும் சரியாகாது மன்னா"

"பிறகு என்ன செய்ய கூறுகிறீர்கள் பெருவணிகரே?"
குழப்பத்துடன் கேட்டான் சங்கிலியன்.
"சித்திராங்கதாவை சிறைபிடிக்க வேண்டும். ஆம் தாங்கள் ஆணையிட்டு என் மகளை சிறைபிடிக்க வேண்டும்."

"என்ன பேச்சு இது பெருவணிகரே, தாம் சுயநினைவோடு தான் பேசுகிறீர்களா? தங்கள் மகளை, அதுவும் இந்த நாடு கொண்டாடவேண்டிய ஆடலரசியை

சிறையில் அடைப்பதா? என்மீதான அவள் கோபத்தை எங்ஙனம் சரி செய்வேன் என்று நான் எண்ணிக் கொண்டிருக்கையில் இப்படியொரு உபாயம் கூறுகிறீர்களே, இது எங்ஙனம் சரியாகும் பெருவணிகரே?" என்று கேட்டான் சங்கிலியன்.

இராஜமந்திரியாராலும் இதை ஏற்க இயலவில்லை.

"பெருவணிகரே, ஈழநாட்டில் மங்கையரை சிறைப் பிடிக்கும் வழக்கம் இல்லை என்பதை மறந்து தாங்களே இங்ஙனம் உரைக்கலாமா? அதுவும் ஒரு பேதைப்பெண் அறியாமல் செய்த தவறிற்காய் சிறைப்பிடிப்பது என்பது எத்துணை பெரிய களங்கமாகும் நமக்கு"

"அது களங்கம் என்பதை நானும் உணர்வேன் இராஜமந்திரியாரே, ஆனால் இதை ஆற்றாமல் விட்டால் தோன்றிவிடுமோ என்று அஞ்சுகின்ற அபாயத்தை விட தற்சமயம் இதுவே ஏற்றவழி என்று நான் கருதுகிறேன். என் உடல்நிலை சரியாக இல்லாத இச்சமயம் சேராதோருடன் சேர்ந்து மீளமுடியா கோரப்பழிகளை அவள் தன்வசம் வாங்கிக் கொள்ளப் போகிறாளோ என்று என்மனம் பதைத்துக் கொண்டிருக்கிறது பிரபு! எப்படியாவது என்மகளை காப்பாற்றுங்கள். அறியாமல் அவள் ஆற்றுகின்ற காரியங்களை அவள் வாழ்நாளையே சீரழித்து விடாமல் இருக்க இச்சமயம் இதைவிட வேறுமார்க்கமில்லை மன்னா! என் மனதை கல்லாய் இறுக்கியபடியே கேட்கிறேன், எனக்காக இந்த உபாயத்தை செய்யுங்கள மன்னா.. என் மகளை சிறையில் வைத்திருங்கள்" என்று மன்றாடிக் கேட்டார் பெருவணிகர்.

"பெருவணிகரே, தாம் இந்த தேசத்தின் மீது கொண்ட பக்தியை எண்ணி நான் மெச்சுகிறேன். ஆனால் ஏதுமறியாத அபலையான சித்திராங்கதாவிற்கு அப்படியொரு அநியாயத்தை இழைக்க என்மனம் இடந்தரவில்லை. தாங்கள் வருந்த வேண்டாம். தாங்கள் அஞ்சுவது போல சித்திராங்கதாவிற்கோ அல்லது சித்திராங்கதாவாலோ எந்த அபாயமும் நேராமல் நான் பார்த்துக்கொள்கிறேன். அது என் பொறுப்பு. அவள் எனக்கும் புதல்வி போன்றவளே. தக்க சமயத்தில் தகுந்த முடிவை நான் எடுப்பேன். தாங்கள் நிம்மதியாக உறங்குங்கள். கூடிய விரைவில் குணமாகி வாருங்கள்" என்று எச்சதத்தர் சிரசை தொட்டு வணங்கினான் சங்கிலியன்.

எச்சதத்தரின் உள்ளத்து பயம் உண்மையாகுமா? சித்திராங்கதாவிற்கு கொடும்பழி ஏதும் சேர்ந்துவிடுமா? அதற்காக ஆடலரசியை சிறையில் அடைப்பது சரியாகுமா? சங்கிலியனின் மனதில் உள்ள அந்தக்கேள்விகள் எமக்குள்ளும் கேட்கின்றன.

*விடை தேடுவோம்....*

# சித்திராங்கதா

## வரலாற்றில் இருந்து...

யாழ்ப்பாண வேந்தர்களது மருத்துவ சேவைக்குச் சான்றாக அவர்களால் உருவாக்கப்பட்டு, நிர்வகிக்கப்பட்டு வந்ததே நாயன்மார்கட்டு சித்த வைத்தியசாலை.

இலங்கைத் தீவிலேயே முதன்முதலாக நோயாளர்கள் தங்கியிருந்து வைத்தியம் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதிகளுடன் நிறுவப்பட்ட வைத்தியசாலை என்ற பெருமைக்குரியது நாயன்மார்கட்டு சித்த வைத்தியசாலையாகும். நாட்டில் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலேயே தீவின் பல பகுதிகளிலும் நோயாளர்கள் தங்கியிருந்து வைத்தியம் பெறக் கூடிய அரச வைத்தியசாலைகள் நிறுவப்பட்டன.
ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கேயர் இந்நாட்டில் அடியெடுத்து வைத்து ஆக்கிரமிப்பு செய்வதற்கு முன்பே அரச ஆதரவுடன் சட்டவிதிகளுக்கமைய யாழ்ப்பாணத்தில் மேற்படி வைத்தியசாலை இயங்கியுள்ளது என்பதை ஆவணங்கள் மூலம் அறிய முடிகின்றது.

குடிமக்களுக்கு மட்டுமல்ல காயமடைந்த போர் வீரர்களுக்கு சத்திர சிகிச்சை உட்பட மற்றும் பல வைத்திய வசதிகளை வழங்குவதற்காகவே இவ்வைத்தியசாலை நிறுவப்பட்டுள்ளது. இவ்வைத்தியசாலையில் இந்து மதகுருமார் தங்கியிருந்து வைத்தியம் பெற்றுக் கொள்வதற்காக தனியான விடுதிகளும் நிறுவப்பட்டிருந்தன.

மேல்மாடம், சமையலறை, சத்திர சிகிச்சைக்கூடம், பிரேத அறை என்பவற்றையும் கொண்டதாக சகல வசதிகளுடனும் இயங்கிய இந்த சித்த வைத்தியசாலை போர்த்துக்கேயர் யாழ்ப்பாண இராச்சியத்தைக் கைப்பற்றுவதற்காக நடத்திய போரின் போது சிதைக்கப்பட்டுள்ளது. போர்த்துக்கேயரதும், ஒல்லாந்தரதும் ஆட்சி முடிவுக்கு வந்து ஆங்கிலேயர் ஆட்சிக்கு உட்பட்ட போது 1838 ஆம் ஆண்டு அவர்களது ஆட்சியில் மேற்படி சித்த வைத்தியசாலை மீளமைக்கப்பட்டு இயங்கத் தொடங்கியது.

போர்த்துக்கேயரின் படையெடுப்பால் வைத்தியசாலை சிதைக்கப்பட்ட போது அங்கிருந்த வைத்திய குடும்பத்தினர் மட்டுவிலுக்குத் தப்பியோடியதாகவும் அங்கிருந்து வைத்தியப் பணியைத் தொடர்ந்து செய்ததாகவும் கூறப்பட்டுள்ளது. அத்துடன் அங்கு நடைபெற்ற அநீதிக்கெதிராக அக்கினி வைரவரை ஸ்தாபித்து வழிபாடும் செய்துள்ளனர். அவர்களால் அன்று தாபிக்கப்பட்ட அக்கினி வைரவர் ஆலயம் இன்றுமுள்ளது.

இந்து சமயத்தவரின் சமூகநல அடிப்படைக் கோட்பாட்டின்படி நிறுவப்பட்ட நாயன்மார்கட்டு சித்த வைத்தியசாலை முற்றுமுழுதாகத் தமிழ் அரசர்களின் ஆதரவுடனேயே இயங்கி வந்துள்ளது. மன்னர் காலத்தில் வரையப்பட்ட மான் சித்திரம் ஒன்று அண்மைக் காலம்வரை அங்கிருந்தமை குறிப்பிடத்தக்கது.

செகராசசேகரன், பரராசசேகரன் ஆகிய தமிழ் அரசர்கள் வைத்தியத்துறையில் புலமை பெற்றவர்களாக, நிபுணத்துவம் பெற்றவர்களாக விளங்கியுள்ளனர். பரராசசேகரன் கீர்த்தி மிகு வைத்தியராக விளங்கியுள்ளார்.
வாதரோக நிதானம், சன்னிரோக நிதானம், பாலரோக நிதானம், கெற்பரோக நிதானம் ஆகிய மருத்துவ நூல்கள் பரராசசேகர மன்னனால் ஆக்கப்பட்டுள்ளன. யாழ்ப்பாணத்தில் விளையும் மூலிகைகளைக் கொண்டே மருந்து தயாரிக்க இந்நூல்கள் உதவியுள்ளன.

மேற்படி நாயன்மார்கட்டு சித்த வைத்தியசாலையில் இருந்த பெறுமதி மிக்க பல வைத்திய நூல்கள் 1995 ஆம் ஆண்டின் இறுதியில் நிகழ்ந்த இடப்பெயர்வின் போது அழிக்கப்பட்டன. பண்டைய தமிழரின் சிறப்புமிக்க வரலாற்று ஆதாரங்கள் பல அப்போது அழிக்கப்பட்டன.

யாழ்ப்பாண அரசர்கள் வைத்திய பாரம்பரையினரை அரவணைத்து உதவியுள்ளனர். அவர்களுக்கு சில கட்டுப்பாடுகளையும் விதித்திருந்தனர் என்பதை அறிய முடிகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள சட்டநாதர் சிவன் கோயில், சந்திரசேகரப் பிள்ளையார் கோயில், கொழும்புத்துறை வதிரிபீட விநாயகர் கோயில் ஆகியவற்றின் பாதுகாவலர்களாகவும் மேற்படி நாயன்மார் கட்டு சித்த வைத்திய குடும்பத்தினரை யாழ்ப்பாணத் தமிழ் அரசர்கள் நியமித்துள்ளனர்.

அரச கட்டளையில் வைத்தியராவதற்கான தகைமைகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன. சைவ சமய விதிப்படி விசேட தீட்சை பெற்றவராய், வியபிசாரம், மது மாமிச போசனம் இல்லாமை, பொய், சூது போன்ற குற்றங்களற்றவராய் நல்லொழுக்கம் உள்ளவராய் இருத்தல் வேண்டும். இவ்வாறான தகைமை கொண்டவர்களாக வைத்தியர்கள் இருப்பதுடன் அவர்களுக்காக கடமைகளும் வகுத்துக் காட்டப்பட்டுள்ளன.

நோய்கள் ஆன்மீகம் பௌதீகம் தெய்வீகம் என்று மூன்று பிரிவுகளாக வகுக்கப்பட்டே வைத்தியம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரசாயனத் தொற்று நீக்கி இல்லாத அக்காலத்தில் சத்திர சிகிச்சை மேற்கொண்ட பின்னர் தையலிடுவதற்கு வெங்காயத்தில் அவித்த தும்பு நார் பயன்படுத்தப்பட்டுள்ளது.

சித்த ஆயுள்வேத முறைப்படி கண்டறியப்பட்ட ரோகங்களின்

(நோய்களின்) எண்ணிக்கை 4448 ஆகும். அத்தனை நோய்களுக்கும் ஆயுள்வேத சித்த வைத்திய முறையில் மருந்துகள் கண்டறியப்பட்டுள்ளன. எலும்பு முறிவு போன்ற உள்ளுறுப்புத் தாக்கங்களுக்கும் மேற்படி வைத்தியசாலையில் மருத்துவம் நடைபெற்றுள்ளது. இதுவும் யாழ்ப்பாண அரசர் கால வைத்தியப் பணியின் மகத்துவத்தை வெளிப்படுத்த சான்றாயமைகின்றது.


மேலும் ஆங்கிலேய தேசாதிபதி மனிங், சேர். பொன் இராமநாதன், முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தனவின் தந்தையார் போன்றோரும் அவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்பதை அங்கிருந்த ஆவணங்கள் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.

(உதவி மூலம் : 'யாழ். இராச்சிய மன்னர்களின் சிறப்புமிகு வைத்தியப் பணிகள்'
த. மனோகரன், துணைத் தலைவர், கல்விக் குழுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்)

# உயிரிழந்தவர்களின் குரலில் பேசும் 'Alexa' அமேசானின் புதிய அப்டேட்

அமேசானின் கேட்ஜெட்டான அலெக்ஸா இன்டர்நெட் வசதியுடன் இயங்கும் ஒரு ஸ்மார்ட் ஸ்பீக்கர். இது நம் கட்டளைகளை உள்வாங்கி அதற்கு இன்டர்நெட் உதவியுடன் பதிலளிக்கும். மேலும் இது அல்காரிதம் செய்யப்பட்ட ஆண் - பெண் இரு குரல்களில் ஆங்கிலம், தமிழ் உள்ளிட்ட பல மொழிகளில் பேசும் திறனைக் கொண்டது. இதைப் பயன்படுத்தி நம் சந்தேகங்களைக் கேட்டறிவது, பாடல்களை பிளே செய்வது எனப் பல்வேறு செயல்களைச் செய்ய முடியும்.

இப்படிப் பல வசதிகள் கொண்ட இந்த அலெக்ஸா சாதனத்தை இன்னும் மேம்படுத்தும் விதமாக பல்வேறு மாற்றங்களைக் கொண்டுவரும் பணிகளில் ஈடுபட்டுவருகிறது அமேசான் நிறுவனம். அதில் குறிப்பாக உயிரிழந்தவர்களின் குரல் போல் மிமிக் செய்து பேசும் புதிய வசதியைக் கொண்டுவருகிறது. இதன் மூலம் நாம் விரும்புவோரின் குரல்களை அலெக்ஸாவில் செட் செய்துவிட்டால் போதும், அது அவர்களின் குரலில் அனைத்து வார்த்தைகளையும் பேசும் திறனைத் தன்னிச்சையாக வளர்த்துக் கொள்ளும். இதற்கான பணிகள் தற்போது நடந்து வரும் நிலையில் விரைவில் இது வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## இங்கிலாந்தில் வரலாறு காணாத வறட்சி - வறண்டு போன தேம்ஸ் நதி



இங்கிலாந்து நாட்டில் கடந்த ஜூலை முதல் வாரத்தில் வரலாறு காணாத வகையில் கடும் வெப்பம் ஏற்பட தொடங்கியது. தேம்ஸ் நதி உள்ளிட்ட பல்வேறு ஆறுகள், நீர்நிலைகள் அனைத்தும் வறண்டு பாலைவனமாக காட்சியளிக்கிறது. 1935-ம் ஆண்டு முதல் இங்கிலாந்தில் மிகவும் வறண்ட மாதமாக கடந்த ஜூலை மாதம் திகழ்கிறது. ஜூலை மாதத்தில் மழை பொழிவு மிகவும் குறைவு என இங்கிலாந்து வானிலை அலுவலகம் தெரிவித்துள்ளது. நாட்டின் சில பகுதிகளில் இதுவரை இல்லாத அளவுக்கு ஜூலையில் வறட்சி நிலவியதாக தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், இங்கிலாந்தின் தெற்கு, மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகள் வறட்சி நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

## உருகும் ஐரோப்பா



ஆஸ்திரேலியாவின் “டாஸ்மேனியன் புலி“ உலகில் அழிந்துபோன விலங்கினங்களில் ஒன்றாகும். இவை தைலசின் என்றும் அழைக்கப்படுகின்றன. இந்த புலிகள் 1930-ல் வரை பூமியில் வாழ்ந்தன. அதன்பின்னர் வேட்டையாடுதல், ஒருவகையான நோய் காரணமாக இந்த வகை புலி இனங்கள் அழித்தன. ஆஸ்திரேலியாவின் டாஸ்மேனியா மாகாணத்தில் உள்ள உயிரியல் பூங்காவில் பராமரிக்கப்பட்டு வந்த உலகின் கடைசி டாஸ்மேனியன் புலி 1936-ம் ஆண்டில் இறந்தது. இந்த நிலையில், ஸ்டெம் செல், ஜீன் எடிட்டிங் தொழில்நுட்பங்களை பயன்படுத்தி அழிந்துபோன டாஸ்மேனியன் புலி இனத்தை மீண்டும் பூமிக்கு கொண்டு வரும் முயற்சியில் ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த விஞ்ஞானிகள் இறங்கியுள்ளனர். இதையும் படியுங்கள்: சல்மான் ருஷ்டி மீதான தாக்குதல் நியாயமற்றது - இம்ரான்கான் கண்டனம் டாஸ்மேனியன் புலியை மீண்டும் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் 20 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வருகிறது. இந்த சமீபத்திய திட்டம் ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் மற்றும் அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தை தலைமையிடமாக கொண்டு இயங்கும் ஆராய்ச்சி நிறுவனத்தின் கூட்டு முயற்சியில் வந்துள்ளது. இதுகுறித்து ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் ஆண்ட்ரிவ் பாஸ்க் பேசும்போது, ”இதற்காக டாஸ்மேனியன் புலியை போன்ற ஜீன் அமைப்புடைய விலங்கின் ஸ்டெம் செல்லை பிரித்து எடுக்க இருக்கிறோம். பின்னர் ஜீன் எடிட்டிங் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டும். இன்னும் 10 ஆண்டுகளில் டாஸ்மேனியன் புலியை மீண்டும் பார்க்க முடியும் என்று நம்புகிறோம்” என்று தெரிவித்தார்.

எஸ்.எஸ்.நுஜன்



# சிக்கலில் பிக்பாஸ் தொடர்

அவுஸ்திரேலியாவில் கிரிக்கெட் போட்டிகளுக்கு என்று ஒரு காலப்பகுதி இருக்கிறது் வருடம் முழுவதும் கிரிக்கெட் நடைபெறுவதில்லை. கிரிக்கெட் தவிர்ந்த மற்றைய விளையாட்டுக்களான ரக்பியின் NRL மற்றும் கால்பந்தின் AFL தொடர்கள், ரசிகர்களின் கவனத்தை ஈர்த்து விடும். பிக்பாஸ் லீக் என்பது அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை நடாத்துகின்ற ரி20 பிரிமியர் லீக் தொடர். இத்தொடர் நடைபெறும் அதே காலத்தில் தான், அவுஸ்திரேலியாவின் சர்வதேச டெஸ்ட் அணியுடன் பலப்பரீட்சை நடத்த மற்றைய சர்வதேச டெஸ்ட் அணிகள் அவுஸ்திரேலியாவுக்கு செல்லும். இதனால் அவுஸ்திரேலியாவின் பிரதான வீரர்களான டேவிட் வார்னர், பட் கம்மின்ஸ், மிட்செல் ஸ்டாக் மற்றும் ஸ்ரிபன் ஸ்மித் ஆகியோர் சொந்த ரி20 லீக்கான பிக்பாஸ் தொடரில் பங்கேற்பதில்லை.

கடந்த சில வருடங்களாக பிக்பாஸ் தொடரின் போட்டி எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டும் இருப்பதால் பல சர்வதேச முன்னணி வீரர்கள் விளையாடுவதில்லை. இதனால் அதிக ரசிகர்களை ஈர்க்க முடியாமல் நஷ்டத்தில் தத்தளிக்கிறது. வெளிநாட்டு சர்வதேச வீரர்களுக்கு புதிதாக ஏல (Draft) முறையை அறிமுகப்படுத்தி உள்ளது. ஒவ்வொரு அணியும் குறைந்தது மூன்று வீரர்களை நான்கு நிலையில் (Platinum, Gold, Silver and Bronze) தேர்வு செய்யலாம். எதிர்பார்த்தது போலவே டுவைன் பிராவோ, கிரான் பொல்லார்ட், டு பிளஸ்ஸிஸ் என்று



பல வீரர்கள் தங்கள் பெயர்களை பதிவு செய்துள்ளனர். ஆனால் சிக்கல் டேவிட் வார்னர் மூலம் வந்துள்ளது.

தென்னாப்பிரிக்கா மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகியவற்றில் புதிதாக இந்திய பிரிமியர் லீக் உரிமையாளர்களின் அணிகள் இருப்பதால், அவர்கள் அவுஸ்திரேலியாவின் டேவிட் வார்னரை தங்கள் அணிகளுக்கு விளையாட வைக்க அதிக சம்பளம் கொடுக்க தயார் நிலையில் இருக்கிறார்கள். இவ்விரு தொடர்களும் பிக் பாஸ் லீக் தொடரின் பின்னைய போட்டிகளின் காலப்பகுதியில் நடப்பதால், அவுஸ்திரேலியாவின் பிரதான வீரரான வார்னர் சொந்த நாட்டில் விளையாடாமல் வெளிநாட்டில் விளையாடும் சூழல் உருவாகும் போது அவுஸ்திரேலியாவின் பிக் பாஸ் லீக் க்கு பின்னடைவு ஏற்படும். இது தொடர்பாக ஒளிபரப்பு உரிமையாளர்களும் அவுஸ்திரேலிய முன்னாள் வீரர்களும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை, மிகப் பெரிய தொகையை டேவிட் வார்னர்க்கு கொடுத்து வெறுமனே ஐந்து பிக்பாஸ் லீக் போட்டிகளில் சிட்னி தண்டேர்ஸ் அணி சார்பாக விளையாட வைத்துள்ளது. மேலும் வார்னர்க்கு, அவுஸ்திரேலியாவில் தலைமை தாங்க விதிக்கப்பட்ட தடையை நீக்கப்படலாம் என்று கருத்தும் நிலவுகிறது. வார்னர் வழங்கப்படும் சம்பளம், 14 போட்டிகளில் விளையாட மேக்ஸ்வெல் போன்ற அவுஸ்திரேலியா வீரர்களுக்கு வழங்குவதை விட இருமடங்காகும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஒன்பது வருடங்களுக்கு பின்னர் மீண்டும் டேவிட் வார்னர் பிக் பாஸ் லீக் தொடரில் விளையாடவுள்ளார் என்பது கூடுதல் தகவல்.

ஆகஸ்ட் மாதம் 28ம் திகதியன்று நடைபெற்ற சர்வதேச வீரர்களுக்கான தெரிவின் போது முன்னணி டி20 வீரர்களான பொல்லார்ட், பிராவோ, டு பிளெஸ்ஸிஸ், ரஸ்ஸல் மற்றும் ஜேசன் றோய் ஆகியோர் தங்கள் பெயர்களை கொடுத்திருந்தும் தேர்வு செய்யப்படவில்லை. இதற்கான காரணமாக பெரிதும் பார்க்கப்படுத்து இவர்கள் பிளாட்டினம் நிலையில் இருந்தாலும், புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இரு (அமீரகம் மற்றும் தென்னாபிரிக்கா) லீக்களில் விளையாடவுள்ளதால் முற்பகுதி ஆட்டங்களில் (பதின்நான்கில் எட்டில்) மட்டுமே பங்கெடுக்க முடியும். எனவே அணிகள் நட்சத்திர வீரர்களை விடுத்து முழுமையாக எல்லா ஆட்டங்களில்






விளையாடிய கூடியவர்களுக்கு முன்னுரிமை அளித்துள்ளது. எனவே இந்த **draft** முறையும் பெரிதும் பயனளிக்கவில்லை. எனினும் ராஷித் கான் மற்றும் மெல்பேர்ன் ரெனேகட்ஸ் தேர்வு செய்த வீரர்கள் முற்பகுதி ஆட்டங்களில் மட்டுமே பங்கெடுப்பர் என்பது குறிப்பிடத்தக்கது. மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி தெரிவு செய்த நியூஸ லாந்தின் பிரபல இடதுகை வேகப்பந்து வீச்சாளர் ரெண்ட் போல்ட்க்கு, இது முதலாவது பிக்பாஸ் லீக் ஆகும்.

எட்டு அணிகளிலும் தேர்வு செய்யப்பட்ட சர்வதேச வெளிநாட்டு வீரர்கள் வருமாறு:

மெல்பேர்ன் ரெனேகட்ஸ் (Melbourne Renegades) - லியாம் லிவிங்ஸ்டோன் (இங்கிலாந்து), முஜீப் உர் ரஹ்மான் (ஆப்கானிஸ்தான்), அகில் ஹுசெய்ன் (மேற்கிந்தியதீவுகள்)

மெல்பேர்ன் ஸ்டார்ஸ் (Melbourne Stars) - ரெண்ட் போல்ட் (நியூஸிலாந்து), ஜோ கிளார்க் (இங்கிலாந்து), லுக் வுட் (இங்கிலாந்து)

பிரிஸ்பேர்ண் ஹீட் (Brisbane Heat) - சாம் பில்லிங்ஸ் (இங்கிலாந்து), கொலின் முன்ரோ (நியூஸிலாந்து), ரோஸ் வைட்லே (இங்கிலாந்து)

சிட்னி சிக்ஸர்ஸ் (Sydney Sixers) - கிறிஸ் ஜோர்டான் (இங்கிலாந்து), ஜேம்ஸ் வின்ஸ் (இங்கிலாந்து), இசர்உல்ஹக் நவீட் (ஆப்கானிஸ்தான்)

அடிலெய்டு ஸ்ட்ரிக்கேர்ஸ் (Adelaide Strikers) - ரஷீத் கான் (தக்கவைக்கப்பட்டவர், ஆப்கானிஸ்தான்), கொலின் டி கிராண்ட்ஹோம்மே (நியூஸிலாந்து), ஆடம் ஹோஸ் (இங்கிலாந்து)

Perth ஸ்கார்சேர்ஸ் (Perth Scorchers) - லாரி எவன்ஸ் (தக்கவைக்கப்பட்டவர், இங்கிலாந்து), பில் சால்ட் (இங்கிலாந்து), டிமால் மில்ஸ் (இங்கிலாந்து)

சிட்னி தண்டர் (Sydney Thunder) - டேவிட் வில்லேய் (இங்கிலாந்து), அலெக்ஸ் ஹேல்ஸ் (இங்கிலாந்து), ரிலீ ரோஸ்சௌவ் (தென்னாபிரிக்கா)

ஹோபார்ட் ஹரிகேன்ஸ் (Hobart Hurricanes) - ஷதாப் கான் (பாக்கிஸ்தான்), ஆசிப் அலி (பாக்கிஸ்தான்), பாஹீம் அ்ரப் (பாக்கிஸ்தான்)